# மனசெல்லாம் மல்லிகை...

## 1

விஜுலா உடலை முறுக்கிப் புரண்டாள். மெல்லிய உடம்பும் வளைந்து கொடுத்தது. அதிகாலை நேரம் - அரை விழிப்பும் குறை தூக்கமுமான பொழுது -

புரள்வது மிக சுகமாக இருந்தது... மேகத்தில் படுத்து உருள்வது போன்ற சொகுசு.

பழகி ஒரு வாரம் ஆனபிறகும் இந்த சௌகர்யம் சொக்க வைத்தது. கண்களை கால்வாசி மட்டுமே பிரித்து அறையை நோட்டமிட்டாள். இதுவும் பழகிய காட்சிதான் என்றாலும் ஆர்வச் சுறுசுறுப்புடன் அவளை எழ வைத்தது.

பச்சைக் கொடிகள் பரவிய திரைச்சீலைகளை ஒதுக்கி இருபுறமும் ஜன்னல் கம்பிகளில் செருகினாள். வெளியே வெளிச்சம் இன்னும் அதிகமில்லை... ஆக சன்னமாய் புகுந்து அறையை நிரப்ப, குளிர் காற்று தாராளமாய் பாய்ந்து வந்து அவளைச் சீண்டியது.

ஏழாம் மாடியிலிருந்த அந்த அறையிலிருந்து ஒரு ராணியின் கம்பீரத்தோடு குனிந்தவள், தன்னைப் போலவே சோம்பல் முறித்து விழித்துக் கொண்டிருந்த சென்னை நகரத்தை நோட்டமிட்டாள். அவசர அவதியில்லாத நகரம் அந்நேரம் நிர்மலமாகவே தெரிந்தது. அது சென்னையின் மையம் தான் என்றாலும் அடுக்குமாடிகள் நிறைந்த குடியிருப்புப் பகுதி. அதிலும் வசதி படைத்தவர்கள் வாழுமிடம் என்பதால் கச்சடா சத்தங்கள் இல்லை. பால்பாக்கெட்டுகள் கூட மணியடிப்புடன் 'யம்மா பாலு' என்ற கூவல்கள் இன்றி வெகு பவ்யமாய் வீட்டு வாசல்களில் பணிந்து காத்திருந்தன.

போன வாரம் வரை அவள் தங்கியிருந்த மகளிர் விடுதியில் இந்நேரத்திற்கே கூச்சலும் தகர வாளிகளின் இழுப்பும் களேபரப்படும். தண்ணீரின் பீய்ச்சலும், தொண்டை வரை நீர் புகுத்தி கொப்பளிக்கும் ஒலியும் உறக்கத்தை ஊடுருவிக் கலைக்கும். தவிர ஐந்தரைக்கே எழுந்தால்தான் ஓரளவு சுத்தமாய் குளித்து, உட்கார்ந்து சாப்பிட்டு, அலறியடிக்காமல் கிளம்பலாம்.

பள்ளியிறுதியில் கிடைத்த தொண்ணூற்றைந்து சதவிகித மதிப்பெண்கள் விஜுலாவிற்கு தலைநகரின் நல்ல மகளிர் கல்லூரியில் கேட்ட படிப்பிற்கான இடத்தைப் பெற்று தந்தாலும் கல்லூரியின் விடுதியில் இடமில்லை என்று கைவிரித்து விட்டார் கல்லூரி முதல்வர்.

விஜுலாவின் அப்பா கெஞ்சினார்.

''நாங்க பட்டிவீரம்பட்டி பக்கமுங்க... பட்டணத்துல யாரையும் அதிகத் தெரியாது...''

முதல்வர் அமர்த்தலாய் புன்னகைத்தார்.

''அப்ப மதுரையிலேயே மகளை படிக்க வைக்கலாமே? எதுக்கு இத்தனை தொலைவில வந்து விடுறீங்க...''



''பெரியவுங்களுக்குத் தெரியாததா? இதுவரை ஊருக்குள்ளேயே புழங்குன பொண்ணு - பட்டணம் வந்து படிச்சா விசேஷம்னு தோணுச்சுங்கம்மா... உலகத்தை இன்னுங் கொஞ்சம் உசரத்துல ஏறி நின்னு பாக்குற வாய்ப்பாச் சுங்களே...''

அம்மணி தலையாட்டி ஆமோதித்தாலும் விடுதிக்குள் சேர்க்கவில்லை! 'நம்ப கல்லூரியின் பக்கத்திலேயே ரெண்டு மூணு ஹாஸ்டல்ஸ் இருக்குதுய்யா... பொண்ணு அங்கேயே தங்கிக்கட்டும்' என்று விட்டதில் குணசேகரனுக்கு வருத்தம் தான்.

''பாதுகாப்பான இடத்துல சேர்க்காம, ஏனோ தானோன்னு சேர்த்துபுட்டீங்கன்னு என்னைய நொய்ப்பா உங்கம்மா'' என்று புலம்பியபடி நாட்களை நகர்த்த வேண்டியிருந்தது. சில மாதங்களில் கொசுக்கடியும், தண்ணீர் பிரச்னையும், வேகாத சாதமும் இடநெருக்கடியும் ஓரளவு பழகிப்போயின... படிப்பின் கவர்ச்சியில் மற்ற அசௌகர்யங்கள் மங்கி விட்டன. மறுவருடம் சற்று பெரிய அறைக்கு மாறினாள். உறவுக்கார கல்யாணம் ஒன்றில் சுந்தரா அத்தையை சந்தித்த பிறகு வாழ்வின் முறையே மாறிப் போனது!

அப்பா அத்திருமணத்திற்கு அழைத்த போது மனமின்றி தான் கிளம்பினாள்.

''எனக்கு யாருன்னே தெரியாதேப்பா - முத நாளே போய் என்ன செய்றது?''

''கூடமாட ஒத்தாசைச் செய்யத்தானேம்மா உறவுன்னு இருக்கது - அதுவும் நாம உள்ளூருல இருந்துட்டு, தாலிகட்ட நேரத்துக்கு மட்டும்னு போனா மரியாதையா இராது...''

சற்று எளிய வீட்டுக் கல்யாணம்தான் என்பதால் கைக்கு கிடைத்த சின்ன வேலைகளை செய்தபடி சுற்றினாள். தரையில் அமர முடியாதே என்ற சங்கட பாவனையில் சுற்றும் முற்

பார்த்த பெரியவருக்கு நாற்காலி எடுத்துப் போடுவது 'கர்புர்' என்று மூச்சிழுத்த குழந்தைக்கு வெந்நீர் தருவது என்று...

தூங்கின குழந்தையை மடியிலிட்ட படி உண்ணத் தவித்த ஒரு இளம் பெண்ணிடமிருந்து குழந்தையை வாங்கி நின்ற விஜுலாவின் தோள் மென்மையாய் தட்டப்பட்டது.

"பொண்ணு வீடா, பிள்ளை வீடாம்மா நீ?"

கேட்ட பெண் பளிச்சென்றிருந்தார். இளநீலத்தில் ஜரிகைக் கட்ட மிட்ட ஆரணிப் பட்டு. தேர்ந்தெடுத்த சிலதங்க நகைகள் முகத்தில் கருணையும் கம்பீரமும் கலந்திருந்தன.

"பொண்ணுக்கு எட்டின உறவுன்னாங்க அப்பா..."

"அப்ப பட்டிவீரம்பட்டியா?"

இப்போது முகத்தில் சற்றும் வியப்பும் சேர்ந்தது.

"ஆமா... அப்ப நீங்களும் பொண்ணு பக்கந்தான்."

"ஆமாம்மா - அங்கே யாரு பொண்ணு?"

"மிஸ்டர் குணசேகரன்."

"பெரியவர் சேகர நாடாரு பிள்ளையா?"

மகிழ்வுடன் தலையாட்டினாள். "ஆமாங்க... அப்பா இங்கதான் இருக்காங்க... கூட்டிட்டு வர்றேன்.." தோளில் தூங்கிய குழந்தையுடன் ஓடியவள் அப்பாவுடன் வந்து குசல விசாரிப்புகள் முடிந்த பின் கோபங்கள் ஊெம்பின!

"எம்ப்பா... நாந்தான் முப்பது வருஷமா இங்க இருக்கேனே. நான் ஒன்னுல்ல, ரெண்டு விட்ட அக்காதான்னாலும் எங்கிட்ட வந்து ஒரு வார்த்தை 'எம்மகளை இந்த காலேஜுல சேத்து விட்டுக்கேன்க்கா பாத்துக்குங்க'ன்னு சொல்லத் தோணலியே உனக்கு? அந்த மரியாதை, பாசமெல்லாம் அப்பத்தியோட போச்சு போ..."



"அப்படியில்லக்கா... விலாசம் எதுமில்ல. சரி தோணலை தான். மன்னிச்சு விட்டிருங்க. இப்ப ஊரு திரும்பதுக்குள்ள உங்க வீடு தேடி வந்து பாத்துட்டுப் போறோம்."

"பாத்துட்டு இரேம்ப்பா - ஏம் பறக்கற?"

"ஊருல தோப்பு துரவுன்னு கிடக்குதேக்கா - பிழைப்பப் பார்க்கணும்ல?"

"அது உண்மைதான்... உம்பொண்ணு ஜாடை, பழகுற பாங்கெல்லாம் அப்படியே நம்ப வம்சம்ன்னு தெரியுது..."

இரு பெரியவர்களும் பாசமும் பெருமிதமுமாய் தங்கள் வீட்டுப் பெண்ணைப் பார்த்திருந்தனர்.

உயரமும், உருவியது போல உடம்பும் அதற்கு சற்றும் சளைக்காத முகவசீகரமுமாய் விஜுலா அழகிதான். அறிவின் ஒளியுடனான கருவிழிகள் அவளது தனிக்கவர்ச்சி. அது போக தாயின் நல்ல வளர்ப்பில் பண்பின் மெருகும் ஏறியிருந்தது.

"கொஞ்சம் மெலிஞ்ச தெரியறா... வீட்டுச் சாப்பாடு இல்லைல்ல? மகளை அடிக்கடி வந்து பார்த்துக்குவியா?"

"வருஷத்துக்கு ரெண்டு தரம்னு வந்திருக்கேன்க்கா... மான்சன்லரெண்டு நாளைக்கு அறை எடுத்துத் தங்கிக்கறது."

"இனி அதெல்லாம் வேணாம். நம்ப வீடிருக்குல்ல?"

"சரிக்கா."

"என்ன விஜுலா அப்படி பார்க்கறே? நான் உனக்கு அத்தை முறை." அவருடைய வீட்டிற்குப் போய், மேலும் பேச்சு வளர்ந்து, விஜுலா தனியார் விடுதியில் தங்குவது அறிந்ததும் சுந்தரா ஆட்சேபித்தார்.

"காலி பண்ணிட்டிடும்ப்பா...கல்லூரிக்குள்ளே இருக்கறது வேற பாதுகாப்பு, வசதி எல்லாம் - அதில்லாம தினம் அவதி அவதியாய் ஓடி, அலுப்பாய் திரும்பறதுக்குப் பதில் விஜு இங்கேயே இருக்கட்டுமே..."

"ரெண்டு வருஷம் கடந்திருக்கக்கா. இனி என்ன ஒரே வருஷந்தானே? படிக்கற பிள்ளை எங்கன இருந்தும் படிச்சா என்ன? வசதிக்குறைச்சலா இருந்தா இன்னும் முழுமூச்சாப் படிப்பா... எளிய வீட்டுப் பிள்ளைங்க எம்பியெழுந்து வாங்கற மார்க்குகளைப் பாத்தீங்கல்ல?"

"எம்மா... நீ எப்படி படிப்பில?"

"95% வாங்கியிருந்தேன் அத்தை. இப்ப காமர்ஸ்ல எழுபத்தஞ்சுக்கு மேலதான்... அத்தை."

விஜூஷா சட்டென தன்னை முறை வைத்து அழைத்ததில் பூரித்த பெரியவள் - "பின்னே - இது மட்டுமென்ன கம்மி மார்க்கா. புத்தியோட உழைப்பும் இருக்கே கண்ணுக்கு." இளையவளின் மோவாயை வருடியவள் - "இந்த மதிப் பெண்ணுக்கு மதிப்பா நீ என்ஜினியரிங் கூட போயிருக்கலா மேம்மா?" விசாரித்தாள்.

"எனக்கு வணிகவியல் மேல் ஆர்வமதிகம் - நமக்கு விருப்பமுள்ள பாடத்தைப் படிச்சால் திறமையா வரலாம்னு..."

"அடடே எம்புள்ளையைப் போலவே பேசறியே? சொன்னேன்ல குணசேகரு, எனக்கு ஒரே பிள்ளை - பேரு விக்ரமன்... இவனும் நல்ல கெட்டிக்காரந்தான்... மதிப்பெண்ணை அள்ளிருவான். ஆனா இப்படித்தான் எனக்கு டாக்டர், என்ஜினியரிங்கில எல்லாம் நோக்கமில்லம்மா. ஆர்வ மெல்லாம் சரித்திரத்துலதான்னான் - சரித்திரத்துக்குப் பிறகு சைக்காலஜி. அது இதுன்னு வகைக்கொரு பட்டமா வாங் கினான். இவ்வளவும் படிச்சு இப்ப செய்றது என்ன தெரியுமா? டிராவல்ஸ் ஆபீஸ் வச்சிருக்கான்... உலகம் முழுசுமிருந்து வர்றவங்களுக்கு இந்தியாவில எங்கெங்கே எதெது பார்க்க லாம்னு கைகாட்டுவான்."

"தம்பி இப்ப எங்கே?"



"இந்த ஃபிளாட்டை வாங்கி இருபத்தைஞ்சு வருஷமாச்சு. அதான் இப்படி விசாலமாய் கட்டியிருக்காங்க. இதோட சேர்த்து பத்துக்கு பதினைஞ்சு அளவுல கார் கராஜ் ஒன்னும் வந்தது. எங்கக் காருக்குத் தனியே ஒரு ஓலைக் கொட் டகையைப் போட்டவன் அந்த கராஜை ஆபீஸாக்கிட்டான். டாலர்ல வருமானம்... அதிலெல்லாம் குறையில்லை... ஆனா இருக்கற மூளைக்குப் பெரிசாய் படிச்சிருக்கலாம்."

குறைபட்டது தாய் மனசு.

தாயின் பேச்சைக் கேட்டபடி வாசற்படியில் நின்றவனின் முகத்தில் சிறு புன்னகை. அதை வந்த விருந்தாளிகளுக்கும் பரிமாறினான்.

"வாங்க... பாவம் வந்ததும் வராததுமாய் என் புராணம் கேட்க வேண்டியதாய் போச்சா?"

வந்தவர்களை அறிமுகப்படுத்தியவர் - "இவ விஜூஷா... இவளும் புத்திசாலிப் பொண்ணுதான்" என்றார்.

"புத்தின்னு பொதுவாய் சொன்னாலும் ஒவ்வொருவருக்கும் அது வெவ்வேறு வடிவில் இருக்கும்மா. சிலருக்கு கணக்கு சுலபம் - சிலருக்கு மொழியறிவு புலவர் ரேஞ்சில் இருக்கும். எனக்கு இப்படி..."

"இப்படிங்கறது சரித்திரம், மனவியலோடு நின்னுடும்னு நினைக்காதீங்க... துப்பறியும் சாம்பு வேலையும் பார்ப்பான்."

"அதுவும் மனவியலின் ஒரு பகுதிதானே அத்தை?" என்று தனக்குப் பரிந்து பேசிய தன் வயதை ஒட்டிய புதியவளைப் பார்த்து அகலமாகவே சிரித்தான்.

"என்னைப் புரிந்து கொண்டதற்கு நன்றி" என்று அதிலிருந்த தொனி உணர்ந்த விஜூஷா தானும் சிநேகமாய் முறுவலித்தாள்.

"அப்படி தம்பி என்ன துப்பறிவாரு?"

''பெருசாய் ஒன்றுமில்லைங்க. இன்னார் இப்படி - இவரை நம்ப வேண்டாம் அவர் வியாபாரம் சரியில்லை. தன்னோடது போல - இப்படிப் பொதுவாய் தான் சொல்வேன் - அதுவே அம்மாக்கு பெரிய கண்டுபிடிப்பாய் தோணிடும்.''

''அப்படியப்படி பிட்டு வச்சிருவான். தவிர வாசிக்கறதெல்லாம் மர்ம நாவல்தான்... பாக்கறது சரித்திர பின்னணி படங்கள்.'' அவனை மிக சுவாரஸ்யமாய் பார்த்திருந்தாள் விஜ"லா.

''அம்மா, நீங்க சீரியல் பார்க்கறதுபோல, 'ராணி'யின் குறுக்கெழுத்தை ஒரே மூச்சல போட்டு முடிக்கறது போல, அது எனக்கு ஒரு பொழுது - போக்கு அவ்வளவுதான்.''

''நம்ப முப்பாட்டனார் யாருக்கோ மர்ம நாவல்களில் ஆர்வம் இருந்திருக்க வேணும் - ஏன்னா எனக்கு அப்படி ஒன்னைக் கையிலெடுத்துட்டா பொழுது போறதே தெரியாது... அகதா கிறிஸ்டி, ஹெரால்ட், நம்ம ஜாவர் சீத்தாராம், ராஜேஷ் குமார்... இப்படி...''

''தமிழ்வாணனை விட்டுட்டியே -''

''விஜ" என்னை விட்டு விடாதே'' என்றவன் கறுப்புக் கண்ணாடிக்காரர் பாணியில் சொல்ல இளையவர்கள் இருவருக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டது.

அதை சுந்தரா அத்தை பூரிப்பாய் பார்த்திருக்க, அப்பா சற்று கவலையாய் தெரிந்தார்...

2

''தெரியுது குணசேகரா... உம்மூஞ்சியிலேயே உங்க கவலை தெரியுது. வயசுப் பெண்ணை எப்படி இளந்தாரி பயல்



இருக்கற வீட்டுல விட்டு வைக்கதுன்னு அஞ்சறே - அப்படித் தானே?''

'அப்படியில்லை' என்று மழுப்பினால் அக்காள் தன் கழுத்தைச் சுற்றிவிட்ட முடிச்சு இறுகிவிடும் என்று உணர்ந்த குணசேகரன் உண்மையை ஒத்துக் கொண்டார்!

''ஆமாங்க்கா - நம்ப பிள்ளைங்க தங்கந்தான் - நமக்கது தெரியும். ஆனாலும் பஞ்சும் பொறியுமாயிருக்கற பருவமில்லியா? ஆக பாக்கற பிறருக்கு இது நேராய்ப் படாது. முறைக்கு அத்தை மகள் வேற...''

''எம் பையன் பொண்ணுகளைக் கண்டா இளிச்சு விரட்டறவனில்லை. இது உறவுப் பொண்ணுன்றதால மரியாதைக்குப் பேசினான். அதிலேயும் பொதுவாய் சில விருப்பங்களும் இருந்ததால சகஜமாய் பேசிகிட்டாங்க... எனக்கு ஒரே பையன்... அறைக்குள் அடைஞ்சு கம்ப்யூட்டரைத் தட்டுவான் அல்லது புத்தகத்தை விரிச்சு அதுக்குள்ளே புகுந்துக்குவான்... இப்ப இளவயசு நடமாட்டம் வீட்டுல இருந்தா பேச, சிரிக்கன்னு வீடு களையாகும். எனக்கும் பெண் பிள்ளை இல்லாத ஏக்கம் தீரும்...''

''இந்தத் தம்பிக்குப் பிறகு உங்களுக்கு ஒரு பெண் குழந்தைப் பிறந்ததாய் ஞாபகம்க்கா... நம்மூருல உங்களுக்கு வளைகாப்பு நடந்ததெல்லாம், நினைப்பிருக்குதே... பிறகு பெண் குழந்தையோட நீ ஊரெம்பினதும் கூட...''

''ப்ச்... ஒரு வயசு பூர்த்தியாகறதுக்கு முன்னேயே விளையா... அப்படித்தான் பெயர் விட்டிருந்தேன் - இறந்துட்டா'' பெருமூச்சுடன் கடந்த கசப்பான நாட்கள் நினைவுகூறப்பட்டன. ''இவர் ஆர்மியில் மேஜர் - பெண் பிறந்த கையோட இரண்டு போதுங்கற அவசரத்துல ஆபரேஷன் செய்துகிட்டார்.''

''அத்தான் தவறி...?''

"பத்து வருஷங்களுக்கு மேலாச்சு... போர்க்களத்துல பிழைக்க வந்தவர் சாதாரண ஒரு விபத்துல போயிட்டார்..."

"அதுக்கப்புறம் நீங்க நம்மூர் பக்கம் வரலைக்கா... அதான் விலாசம் எதுவும் தெரியாமப் போச்சு..."

"பெத்தவங்களும் இங்கே அண்ணா வீட்டுக்கே வந்த பிறகு எனக்கு ஊருக்கு வர வாய்ப்பில்லை... பெரியவங்க போய், இப்ப அண்ணாவும் ஒரே மகனோட ஆஸ்திரேலியா போய் செட்டிலாயாச்சு... ஆனாலும் உறவு ஊருன்ற நெருக்கம் தேவைதான் - இப்ப உங்கிட்ட 'சட்'டுனு உரிமையெடுத்துப் பேசிடறது போல, புது சிநேகிதங்களிடம், நெருங்கிப் பழகிட முடியுமா? அந்த உரிமையிலதான் கேட்கறேன்?"

"வந்துக்கா... நா... அவனையும் அதான் விஜு அம்மாவையும் கேட்கணும்னு..."

"பின்னே? அம்மாக்காரியக் கேட்காமலா? படிப்பு முடிஞ்சதும் முழுக்க மருமகனாக்கிக்க ஆசைப்படறா எங்கக்கான்னு அதுக்கும் சேர்த்தே சம்மதம் வாங்கிடு."

திடுக்கிட்டு நிமிர்ந்தார் குணசேகர்.

"விஜுவை ரொம்பப் பிடிச்சிருக்குப்பா - படிப்பு, அழகோடு, அருமையான குணம். இப்போதுள்ள பல பொண்ணுங்ககிட்ட காணக்கிடைக்காத பெரும் சொத்தில்லையா அது? இவகிட்ட இயல்பாவே அமைஞ்சிருக்குது - விக்கிரமன்ட்ட எப்படி கலகலன்னு பேசிப் பழகறாப் பாரு - கள்ளமிருந்தா இப்படி இயல்பாப் பேசிச் சிரிக்க சாத்தியமேயில்லை..."

"பேசறேன்க்கா... மறுவாரமே வந்து உங்களுக்கான பதிலைச் சொல்லிடறேன்..."

தாயிடம் முழு விவரமும் சொன்னாரோ இல்லையோ, விஜுலா விரைவில் சுந்தரா அத்தையின் வீட்டில்



குடியேறினாள். மூன்று படுக்கை அறைகள் கொண்ட விசாலமான வீடு அது. சாயங்கால வேளைகளில் கடற்காற்று பிய்த்தடிக்கும்.

சத்தத்தோடு தூசியும் கம்மி.

அதுபோக அருமையான வேலைக்காரி அச்சாணி.

ஒல்லியாய், வெற்றிலை வாயுடன் பரபரவென்று சுழலும் அவளிடம் முதலிலேயே கேட்டு விட்டாள் விஜுலா.

"அதென்ன பேரு - அச்சாணி?"

கழுவிய பாத்திரத்தை அப்படியே விட்டுவிட்டு வாய் பிளந்து இவளைப் பார்க்க, அதை எடுத்து துணியால் துடைத்தபடி நின்றாள் விஜுலா.

"இதென்னம்மா... தம்பியப் போலவே கேட்டுக்கிற?"

"ஆர்வந்தான்... என்ன அர்த்தம்?"

"ஆறு பயலுவளுக்குப் பிறவு பொறந்த பொட்டைப் புள்ளம்மா நானு... குடும்பத்துக்கு பொண்ணுதான் அச்சாணி. அத்தினி பேரையும் சேத்து வச்சு கழல விடும்னு பெரியவக சொல்ல, அத்தையே எனக்குப் பேரா வுட்டாச்சு."

"அருமையான அர்த்தம்."

"நீ நவரும்மா... மேல தண்ணி தெறிக்குதுல்ல?"

"பரவால்ல அச்சாணி. வேலை சீக்கிரம் முடியுமில்ல... நீ இங்க முடிச்சுட்டு இன்னும் ரெண்டு வீட்டு வேலையப் பாக்கிறியே."

"காலேசுல படிக்கற உங்களுக்குப் படிப்பு வேல இருக்குமில்ல?"

"அதுக்குன்னு சாப்பிடாம குளிக்காமலா போறோம்?"

துடைத்த பாத்திரங்களை அதனதன் இடத்தில் வைத்தவள் கேட்க, அச்சாணி அன்று மாலையே எஜமானி அம்மாளிடம் சான்றிதழ் தந்து விட்டாள்.

"நல்ல பொண்ணுங்கம்மா... நம்ப தம்பிக்கு இத்தயே முடிச்சிருங்க" என்று!

விஜூலா தயாரித்த இஞ்சித் தேநீரின் மணம் வீடெங்கும் இளசாய் அலையடித்தது.

படுத்திருந்த அத்தையை, விக்கிரமனை எழுப்பி சமையலறைக்குக் கூட்டி வந்தது - மேஜையில் சைனா கெட்டிலோடு கோப்பைகளும் காத்திருந்தன.

"ம்ம்... இதுதான் ராஜபோகங்கறது போல... நீ வந்து ஒரு வாரமான பிறகும் இந்த லக்ஸரியை ரொம்ப ரசிக்கறேன்" என்றான் விக்ரமன்.

இவள் வந்து சேரும்முன் காலைத் தேநீர் தயாரிப்பு அவன் பொறுப்பில் இருந்த வேலை. ஒரு புத்தகத்தில் கண்களை ஓட்டியபடி அவன் தயாரித்த தேநீரில் மணம், நிறம், சுவை எல்லாம் வெகு சுமார்தான்.

எட்டு மணிக்குதான் அச்சாணியின் வருகை. வந்த இரண்டே மணி நேரத்தில் சமையலை மேல் வேலைகளை முடித்து விட்டு அடுத்த வீட்டிற்கு பறந்து விடுவாள்.

"இப்படி மூணு வீட்டுல மாறி மாறி வேலைகளைச் செய்றது சிரமமாச்சே அச்சாணி- சம்பளத்தைக் கூட்டித் தர்றேன் - இங்கயே இருந்துடேன்" ஆரம்பத்தில் சுந்தரா அனுதாபம் காட்டியதுண்டு.

"தெம்பு குறைஞ்சதும் அப்படி நின்னுக்கறேம்மா... உழைக்க தெம்பிருக்க வரைக்கு இப்படி ஓடிக்க வேண்டித் தான். இப்படி உழைக்கமே கைல காக தங்குவேனான்னுதே? வீட்டு ஆம்புளை சரியில்லைம்மா?"

ஆனால் வைரவனை - அதாவது அச்சாணியின் வீட்டு ஆண்பிள்ளையை முதல் முறையாய் பார்த்த விக்ரமன் கேட்டுவிட்டான்.



"உன்னவரைப் பார்த்தா நல்ல ஆளாய் தெரியுதே அச்சாணி - கண்ணு நேரேப் பார்க்குது - தெளிவான சிரிப்பு கனிஞ்சு பேச்சு... ம்ம்?"

அச்சாணி சற்று கர்வமாகவே புன்னகைத்தாள்.

"சரியில்லைன்னா குடி, கூத்தின்னாப்பல இல்ல துரை. உறவு, சிநேகிதம்னு சுத்தி அதுக்கு எப்போவும் ஆளு வோறும். ஆளும் தேளும் சும்மாக் கெடக்குமா? அத்தக் கொடு இத்தக் கொண்டான்னு பிடுங்கிற மாட்டாக? பிடுங்கதுக்கு முன்னமே அள்ளி வுடற புண்ணியவானு இவரு... அத்தத்தாஞ் சொன்னேன்... அதென்ன துரை ஆளப் பாத்ததுமே கரீக்ட்டா எடை போட்டுட்ட?" சிலாகித்தாள்.

அதன் பிறகும் விக்ரமனின் கணிப்புகளை சரியென்று கவனித்தவள் அவளது தாயிடம்,

"துரைக்கு அபார மூளைம்மா - அந்தக் காய்கறி விக்கற குட்டி சரியில்ல - இனி அதுக்கிட்ட வாங்காதேங்கல்லா? அந்த குட்டி மூணாவது மாடி சேட்டு அம்மா காசெடுக்க உள்ளத் திரும்பின நேரம் வீட்டுச் சாமானுகளை ஒவ்வொன்னா திருடிக் கூடைக்குள்ள போட்டுட்டு போயிருக்கா..."

இத்தகு நற்சான்றிதழ்களை சுந்தரா அத்தை அவ்வப்போது விஜூலாவிடம் சொல்லி மகிழ்வதுண்டு. வாயாரப் பேச, கொள்ள ஒரு பெண் துணை கிடைத்த மகிழ்ச்சி அவருக்கு.

உடனே விஜூலாவிற்கு குணசாலி பட்டம் அச்சாணியிடமிருந்து கிடைத்தது போல, விரைவில் புத்திசாலிப் பட்டியலிலும் அவளுக்கு இடமளிக்கப்பட்டது!

அன்று விஜூலா தேநீர் தயாரிப்பை முடித்து இட்லி வார்த்து குக்கரை மூடிய நேரம் அச்சாணி புயலென நுழைந்தாள்.

"எந்தங்கம்... உவ்வாய்க்கு ஒருக்கியோ சக்கரையத்தாம் போடணும்... இல்லீன்னா எங்கையில இந்நேரம் காப்பு ஏறியிருக்கும்."

சட்னிக்கு மிளகாய், பூண்டு, பொட்டுக்கடலை எல்லாம் அளவாய் எடுத்து மிக்ஸியில் இட்ட விஜுலா தேங்காயை அச்சாணி பக்கமாய் உருட்டினாள்.

''முதல்ல இதைத் துருவிடு அச்சாணி... துருவிட்டே வேணும்னா பேசு.''

தேங்காயை ஒரே தட்டில் உடைத்து, நீரைத் தம்ளரில் எடுத்தபின் வேலைக்கு வாகாய் உட்கார்ந்த அச்சாணியின் தலை பலக்க ஆடியது.

''உனக்கு மூளைம்மா ஆனாலும்...''

விஜுலா புன்னகைத்தாள் - ''என்ன விஷயம்?''

''துரைய மாதிரியே கவனிப்பு, கணிப்புன்னு... அவருக் கேத்த துரைதான்.''

இளையவளின் முகம் வெந்தாலும் உள்ளே சற்று கோபமும் தான். இதென்ன ஆளாளுக்கு தனக்கும் விக்ரமனுக்கும் முடிச்சு போட்டு பேசுவது? இந்த ரீதியில் போனால் இருவருக்கும் இடையே மொட்டு விட்டிருக்கும் 'நட்பூ' கருகி விடாதா?

''விஷயம் என்னன்னு சொல்லுவியா?''

''நேத்து வக்கீலு வூட்டுல அந்த வூட்டுப் பொண்ணை, மாப்பிள்ளை வூட்டாரு பாக்க வர்ராங்கன்னு ஓடுனேன்ல? வேலை பிச்சு எடுத்திருச்சு. ரெண்டு வூட்டுக்கும் சம்மதம்னு ஆகி பேச்சுஞ் சிரிப்புமா இருக்கேல்லதான் ஒரு சலசலப்பு.''

''என்ன?''

''வூட்டம்மாவோட ரூவி மோதிரத்தக் காணலைன்னு மூசுமூசுன்னு அது பத்திப் பேசினாலும் மாப்பிள்ளை வீட்டார வச்சிகிட்டு விலா வாரியாத் தேட முடியலை. அது அச்சாணியாமத் தோணிட்டக்கூடாதுல்ல? அதாஞ் சொன்னேனே உன்னாண்ட...''



''ம்... மாப்பிள்ளை வந்த குஷியில வீட்டம்மாவே கிரிஸ்டல் டம்ளர்களை எல்லாம் கழுவினாங்கன்னும் கூட சொன்னே... அதான் யூகிச்சேன்... நா சொன்னது போல கழுவற சிங்க்லதானே கிடைச்சது மாணிக்க மோதிரம்?''

''க்ரீக்கிடும்மா... ரூவின்னா மாணிக்கமா? ராத்திரி மறுபடி வந்து குமிஞ்சு கிடந்த அத்தனை பாத்திரம், எச்சித் தட்டையும் கழுவி துடைச்சிட்டுப் போகன்னுருக்க அந்தம்மா... அப்படிப் போனா வூட்டுல களேபரம்... ஐயோ பதினைஞ்சாயிர ரூவாப் பொருளாச்சேன்ர கூச்சலு... எல்லாருக்கும் எம்மேல சந்தேகந்தான்... ஏன்னா நாந்தான் வந்துப் போறவ? ச்சேன்னு ஆவுது... அதே சமயம் பொருளை மூட்டுத் தராம நாங் கிளம்பிற முடியாதுன்னும் புரியுது. சாடைமாடையாப் பேசதுங்க. பொலிஸைக் கூப்பிடணும்... அவுங்க நாயைக் கூட்டி வந்தா களவாண்டவனை 'சல்'லுனு கவ்விரும்னு...''

''பெரும்பணம்னாலும் அந்தம்மா பரவால்ல அவங்க மகள் நல்லமாதிரின்னு சொல்லுவியே...''

''அங்காங்... சொன்னேன் - ஆனாலும் ஏழைன்னா துச்சந்தானே? பரபரன்னு கழுவற இடத்துல குமிஞ்சிருந்த தட்டு, பாத்திரத்தை எல்லாம் உருவிட்டு பாத்தா, பளிச்சுனு கிடக்குது மோதிரம். கூட்டிப் போயி காட்டி எடுத்துக்கச் சொன்னேன்...''

''நீதான் பொலிஸ்ன்னதும் பயந்து பொருளை அங்கேப் போட்டுட்டன்னு நினைப்பாங்க...''

தேங்காய் துருவலையும் மிக்ஸியில் சேர்த்து சுழல விட்டாள். ''க்ரீக்கட்டுமா - அவுக பார்வ அப்படித்தா தோணுச்சு. சந்தேகம்னு வந்ததுக்கப்பால அப்புறம் என்ன சேவகம் செய்ய - சொல்லு? அதாம் முதல்ல அங்கபோயி பேசி, கணக்கத் தீத்துட்டு வந்தேன். அதாங் கொஞ்ச தாமசமா விட்டுது...''

"வாழ்க்கையில இதெல்லாம் சகஜம் அச்சாணி - மனசை ரொம்ப சிலிர்த்துக்கக் கூடாது."

"அடடே... இந்தபேச்சுதான் நானும் அந்த வக்கீலு வூட்டு தம்பியாண்ட சொன்னேன்."

"எதுக்காக?"

"அது பெரிய கதை தங்கம்... விவரமாச் சொன்னாத்தான் புரியும்..."



3

எங்கே என்ற இலக்கின்றி காரைச் செலுத்திக் கொண்டிருந்தான் பாண்டியன். அவித்த முட்டை போலிருந்த அந்த வெள்ளை வாகனம் அவசரமின்றி நகர்ந்தது.

நேற்று வீட்டில் நடந்த சம்பவம் அல்லது படலம் அவன் மனதை பலவிதங்களில் சஞ்சலப்படுத்தியிருந்தது.

தங்கை பவளத்தை நேற்று பெண் பார்க்க வந்திருந்தவர்கள் பெரிய இடமாம். லட்சங்கள் துச்சமாய் ஐந்து, பத்து என்று குறிப்பிடப்பட்டன. தங்கை முதுகலையின் இறுதி வருடத்தைப் பயில ஆரம்பித்திருந்தாள்.

"அப்ப கல்யாணத்துக்கு ஒரு வருஷம் காத்திருக்கணுமோ?" பையனின் அக்கா இழுத்தாள்.

"கல்யாணமாகிற வரைக்கும் சும்மா கிடந்து போரடிக்க வேண்டாம்னுதானே நம்மபொண்ணு போலவுங்க படிக்கறது... சும்மா டைம் பாஸ்..." என்று கல்வியையும் துச்சமாக்கினர்.



சதா காசு பற்றியும், கல்யாணத்தை ஆடம்பரமாய் நடத்த அதை எப்படியெல்லாம் வாரி இறைப்பது என்பது பற்றியுமே பேசியவர்களிடம் பண்பை, இதமான குணத்தை எதிர்பார்த்து விட முடியாது என்பது எந்தப் பேச்சிலும் கலக்காமல் ஒதுங்கி நின்ற பாண்டியனின் கருத்து.

இவனது பெற்றோருமே வந்திருந்த மாப்பிள்ளை வீட்டாருக்குச் சளைக்காமல் பணப்பாட்டு பாடினார்கள்.

"மாப்பிள்ளை அழைப்புக்கு வைர மோதிரம் போடறது எங்க வீடுகள்ல பழக்கம்..."

"பின்னே? மோதிரம்னாலே வைரந்தானே? பிச்சக்காரத் தனமாய் வெறும் அரைப் பவுனை உருட்டிப் போடுவாங்களா என்ன... ஹி ஹி?"

"இதுதான்... நமக்கேத்த சம்பந்தமாய் தேடிப் பிடிக்கணும்ங்கறது. சலபமா ஒத்துப் போயிட்டோம்முல்ல?"

"ஹி... ஹி... போன மாசந்தான் பவளத்துக்கு வைர வளையல் செய்தோம். கீர்த்திலால்ல மூணு லட்சமாச்சு... அந்த ராசிதான் உங்க வரன் வந்ததுன்னு தோணுது..."

"ரூபி... அதான் மாணிக்கந்தான் எங்க குடும்பத்துக்கு ராசி. இந்த அரிசி ரக மாணிக்க வளையலைப் பார்த்தீங்களா?"

மாப்பிள்ளையின் அக்கா தன் குண்டு கையை நீட்டினாள். பொடி அரிசி வடிவத்தில் ஒன்று போல நூறு கற்களைப் பொறுக்கி எடுத்து எடுப்பாய் கட்டியிருந்த நகை அது.

"அம்சமாயிருக்குது.. விலை அதிகமிருக்கும்..."

"என்னப்பா விலை இது? ஒன்னரையா ரெண்டா?"

இரட்டை நாடியைக் குலுக்கியபடி அப்பெண் கேட்க பாண்டியனுக்கு அடிநாக்கு வரைக் கசந்தது.

கண்ணாடி வளையல்களோடான மல்லிகாவின் சூம்பிய கரம் கண் முன் வந்தது.

மணப்பெண்ணாகப் போகும் பவளமும் சளைக்காமல் பெருமை பேசினாள்.

"அம்மா, நீங்க கூட இப்ப ஒரு மாணிக்க மோதிரம் வாங்கிக்கலை?"

"அடடே ஆமாம்... அப்ப இந்த மோதிர ராசிதான்னு சொல்லு..." வாயெல்லாம் பல்லாக தன் விரல்களைப் பார்த்த அம்மாவின் முகம் சற்றுக் கோணியது.

மோதிர விரல் மூளியாக இருந்தது! அதைச் சொல்ல, அச்சாணியமாய் தோன்ற வேண்டாமென்று பேச்சை மாற்றினாள்.

"தம்பி - உங்களுக்கு இன்னும் ஒரு ஆப்பிள் ஜூஸ்?"

"ம்ம் - பவளம் எடுத்திட்டு வந்தாக் குடிக்கலாம்."

மாப்பிள்ளைப் பையன் 'ஜோக்'விட, மற்றவர்கள் அளவுக்கு மீறி சிரித்துக் குலுங்கினார்கள்.

"மாப்பிள்ளை நல்லாப் பேசறார்... அப்படித்தான் இருக்கணும்..."

பாண்டியன் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

மல்லிகா யோசித்து நிதானமாய் பேசுவாள்... அவளது அபாரமான பல்வரிசையை அவன் வெளியே இருந்துதான் கவனித்திருக்கிறான். இவன் முன் அவள் முறுவலிப்பதும் கூட இல்லை.

இவனது வீட்டில் பணம் இருப்பவர்களிடம் மட்டும் அதிகமாய் பல் காட்டப்படும்... இப்படி காசின் அடிப்படையில் கல்யாணம் பேசுமிடத்தில் நிச்சயம் மல்லிகாவிற்கு இடமிருக்காது...

தன் வீட்டாரின் குணம் பாண்டியனுக்கு ஒன்றும் புதிதல்ல. தெரிந்ததுதான்... தெரிந்தும் தான் மல்லிகாவைப் பார்த்து



பிரியப்பட்டது தப்புதான். மனதை பறிகொடுத்ததோடு நிறுத்திக் கொண்டது புத்திசாலித்தனம்.

"எம்மனசு எனிப்படி உள்ளிடமாய் வந்து ஒட்டிக் கொண்டதுன்னு தெரியலை மல்லிகா. அதுவும் சில பார்வைகளிலேயே... ஆனா இனி அதைப் பிய்த்து பிரிக்க முடியாதுன்னும் தோணுது. உனக்கெப்படி... என்னைப் பிடிச்சிருக்கா?" என்றெல்லாம் கேட்டு அச்சின்னப் பெண்ணின் மனதைச் சொல்லெறிந்து கலைக்கவில்லை.

ஆனால் மல்லிகாவும் அப்படியொன்றும் விவரமில்லாத பேதை அல்ல. வாட்டசாட்டமான ஒரு வாலிபன் ஒரு நாளைக்குக் குறைந்தது பத்து தரம் தன் கடையில் குறுக்கும் மறுக்குமாய் போய் வருவதையும், அந்நேரம் மிக ஆவலாய் அவனது கண்கள் தன்னைப் பிய்த்து விழுங்குவதையும் கவனியாமல் இல்லை.

அப்பகுதிக்கு இவளுடையது ஒன்றே பூக்கடை. பூக்கடை என்றால் மல்லிகை, முல்லை, கனகாம்பரத்தைச் சரமாய் தொடுத்து, சர்ப்பம் போல சுற்றி வைத்து முழம் போட்டு விற்கும் சாதாரணக் கடையில்லை. 'ஃபிளாரிஸ்ட்' என்றழைக்கப்படும் நாகரீக மலர் வியாபாரம். நீண்ட காம்புகளுடன் கையகல ரோஜாக்கள், க்ளாடியோலாஸ், சின்னச் சிங்கார செவந்தி, ஆர்க்கிட் என்றும் எல்லாம் ஆடம்பர ரகத்தைச் சேர்ந்தவை.

"ஒவ்வொரு பூவும் பத்து ரூபாய், ஸார் - அந்தப் பக்கம் உள்ளது ஒன்று பதினைந்து ரூபாய்" என்று விலை சொல்லி,

"ஒரு டஸன் வையும்மா" என்ற பதில் கிடைத்ததும் அழகான பன்னிரெண்டு மலர்களை அவற்றுக்குப் பொருத்தமான இலைகளுடன் அலங்காரமாய் அடுக்கி, கண்ணாடி காகிதத்துள் பொதிந்து, சாட்டின் ரிப்பனால் முடிச்சிட்டு நீட்டி, காசை வாங்கி கல்லாப் பெட்டியை நிரப்பும் வேலைதான் மல்லிகாவிற்கு.

அதுவரை அக்கடையை கவனியாமல் கடந்த பாண்டிய னுக்கு ஒரு நல்ல நாள் அன்றுதான் அது கண்ணில், கருத்தில் உறைத்தது.

நண்பன் வின்சென்டிற்கு வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்பு அமைந்ததைக் கேள்விப்பட்டதும் பாராட்டக் கிளம்பியவனின் கண்கள் அப்பூக்கடையைத் தடவிய போதுதான் தோன்றியது. மனமார்ந்த வாழ்த்துக்களை மலர்களோடு சொன்னால் என்ன?

சொல்லலாமே... காரைத் திருப்பினான்.

வாகான இடம் தேடி நிறுத்தி இறங்கியவனின் கண்கள் கடையின் மலர்களைத் தழுவ, அத்தனைப் பூக்களிலும் அழகாய் தெரிந்தாள் அவள்!

தன்னையும் மீறி தனக்குள் விசிலடித்தான்.

யாரவள்... இத்தனை நாட்களாய் இங்கேயா இருந்தாள். தன் வீட்டிற்கு மிக அருகில்... ஒரு நாளைக்கு நாலு தரம் இப்படி ஒரு அழகியைக் கவனியாமலா கடந்து போய் வீணாக்கினோம்? பார்வையை விலக்காமல் படியேறினான்.

உயிருள்ள ஒரு பூவாய் உள்ளே நின்றாள் அவள்... நுழைந்த வனை மிக நிதானமாய் அவள் நோக்க, பாண்டியனுக்குள் படபடத்தது! குளிரூட்டப்பட்ட அச்சிறு கடையை சுற்றியவன், கடைசியில் அவளையே உறுத்தபடி நின்றான்.

அவன் தன் தேவையை புரியாமல் தடுமாறுவதாய் புரிந்தவள் இனிமையாய் கேட்டாள் -

"எந்த மாதிரி நிகழ்ச்சி அல்லது வைபவம் ஸார்?"

"ம்ம்?"

"எந்த விசேஷத்திற்கு பூச்செண்டு தர விரும்புறீங்க?"

"பார்த்ததான் விசேஷம்?"

அவனது புருவங்கள் சன்னமாய் மேலேறின.



"என் சிநேகிதனுக்கு ஒரு நல்ல வியாபார டீல் அமைஞ் சிருக்குது- அவனைப் பார்த்து வாழ்த்தணும்... அதான்." சமாளித்தான்.

இரண்டாம் நிமிடம் பல வர்ண குண்டு ரோஜாக்களை, மயிலிறகு போன்ற அஸ்பேரகஸ் இலைகளின் நடுவே அமைத்து ஒரு 'பொக்கே' தயாரித்து நீட்டினாள்.

"இது போதுமா ஸார்?"

"ப்ரமாதம்..." என்றவனின் விரல்கள் பூச்செண்டை வாங்கிக் கொண்டாலும் வியந்த விழிகள் அவள் மீதே நிலைத்திருந்தன.

ஏதோ தன் கண்களுக்கு ஒரு இதமான காட்சியைக் கண்ட குஷி என்றுதான் முதலில் நினைத்தான்.

ஆனால் கண் கோப்பையை ஐஸ்க்ரீமாய் நிரப்பும் பல பெண் களை அவனுக்குத் தெரியுமே - அவன் புழங்கும் பணக்கார வட் டத்தில் கவர்ச்சியும், ஒயிலும் கலந்த அமர்க்களப் பெண்கள் பலர் உண்டு. அவர்களிடம் பேசிப் பழகிய போது ஏற்படாத கிளர்ச்சி பெயர் தெரியாத இவளைப் பார்க்கும் போதெல்லாம் கிளம்பி அவனைக் கலங்கடித்தது. அந்தக் கலக்கலைத் தாள முடியாமல் அடிக்கடி போய் பூ வாங்கினான்... பேசினான்... பார்த்தான். அவன் அலுவலக மேசையிலும், வரவேற்பறை யிலும் அவள் கை வண்ணம் சொல்லும் மலர் கொத்துக்கள் வண்ணமயமாய் சிரித்தன.

ஆனால் மனம் விட்டுப் பேசவோ, அவளை வெளியே அழைத்துச் செல்லவோ துணிவு திரளவில்லை பாண்டிய னிடம். எளிய குடும்பத்துப் பெண் அவள். போனில் அவள் பேசுவதிலிருந்து அவள் பெயர் மல்லிகா என்று அறிந்து கொண்டான். பலமுறை கடைக்குப் போன பிறகும் அவனைக் கண்டு உரிமையாய் கலகலக்கவில்லை அவள். வாடிக்கை யாளர் அனைவரிடமும் பாந்தமாய் பழகிய அவளது பாங்கை ரசித்தான். உயர்ந்து கீச்சிடாத, முணுமுணுக்காத குரல் வளமும்

அவளைச் சுண்டி இழுத்தது. எந்த அவசரத்திலும் பதறாத அவள் அசைவுகள் அவளது கண்ணியத்தைக் கூட்டின.

அழைத்ததும் துள்ளியடித்து உடன் வரும் ரகமேயில்லை இவள். ஆனால் இத்தனையையும் நனைத்த கம்பளி போல அழுத்த மூடிவிட்டிருந்தது பயம்!

பணம், பகட்டு தவிர வேறு அளவுகோல் அறியாத தன் குடும்பத்தார் மல்லிகாவை மருமகளாய் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது புரிந்த பரிதவிப்பு!

எத்தனைப் பணமிருந்தும், தன்னை ஒரே பார்வையில் சுருட்டிக் கொண்டவளை, மனமெல்லாம் நிரம்பி மணப்பவளை, தன் வாழ்க்கைத் துணையாய் சேர்த்துக் கொள்ள முடியாது என்பது புரிந்த ஏமாற்றம்...

இதை அடக்க முடியாமல்தான் ஒரு நாள் அச்சாணியிடம், கொட்டியே விட்டான் பாண்டியன்!



# 4

“இந்த வயசுல இதெல்லாஞ் ஜகஜந் தம்பி. ரொம்ப சிலுத்துக்காதன்னுதான் நானுஞ் சொன்னேம்மா...”

“பூக்கடை மல்லிகாவின் மேல் வக்கீல் வீட்டுப் பாண்டியனுக்கு ரொம்ப ஆசை. ஆனா அவளை தன் வீட்டார் மருமகளாய் ஏற்றுக்க மாட்டாங்கன்ர பயமாக்கும்?”

“உம்மூளைக்கு நீ புரிஞ்ச, நச்சுன்னு சொல்லிட்டே... அத்தான் விஷயம்.”



“எந்த அத்தான் விஷயம்?” சமையலறைக்குள் தலை நீட்டிய விக்ரமன் பளிச் சிரிப்புடன் விசாரித்தான்.

“உங்விஷயம் இல்ல துரை... மீசை புது ஸ்டைலா இருக்குதே?” விஜுலாவும் அவனுடைய மீசையின் புது கோணத்தைக் கவனிக்காமல் இல்லை. நிலம் நோக்கித் தொங்கிக் கொண்டிருந்த அது இப்போது நிமிர்ந்திருந்தது. ஆனாலும் அச்சாணியைப் போல சகஜமாய் அவளால் அதைக் குறிப்பிட்டு பேச முடியவில்லை. காலை உணவை மேஜையின் மீது கொண்டு வைக்கும் வேலையில் மும்முரமானாள்.

“நல்லாயிருக்குதா?” மீசையைத் தடவியபடி கேட்டான்.

“உம்மூஞ்சிக்கு எதுவும் எடுப்புத்தான்...”

“ஆனா நா அப்படி சொல்ல முடியலியே...”

“ஏன்... எம்மூஞ்சிக்கு இன்னாவாம்?” அச்சாணி கறாராய் கேட்டாள்.

“அதில்லை... கையச் சொல்றேன். உன் கைப்பக்குவத்துல தயாரான எல்லாமே கொஞ்சம் மோசமாத்தான் இருந்திருக்குது. அம்மா கிளப், கல்யாணம்னு கிளம்பிட நான் பாவம்... இப்பத்தான் ருசியான சாப்பாடுன்னா என்னன்னு தெரியுது!”

இந்த மறைமுக பாராட்டு விஜுலாவை எட்டியதுதான். ஆனால் இவன் வந்த அன்று சகஜமாய் தன் முகம் பார்த்து பேசியவன் இன்று மறைமுகமாய் பாராட்டுவது ஏன் என்ற சிறு சலிப்பும் உள்ளே உறுத்தியது.

குளியலறைக்குள் புகுந்தவளின் மனம் மீண்டும் அச்சாணி மூலம் அறிந்த காதல் கதைக்குத் தாவியது.

இப்பகுதிக்கு குடியேறிய முதல் நாளே அவளுக்கு மல்லிகாவின் பரிச்சயம் ஏற்பட்டு போனது.

அத்தை வீட்டிற்கு வந்திறங்கிய அன்றே, தன் பரிசாய் இருக்கட்டும் என்று 'மலர்வனம்' என்ற அக்கடையிலிருந்து விதவிதமாய் பூக்களை வாங்கி வந்திருந்தாள் விஜுலா.

அறைகளில் தூசு படிந்து பிளாஸ்டிக் மலர்களோடு இருந்த குவளைகளைக் கழுவி, நீர் ஊற்றி அதில் புதுப்பூக்களை நேர்த்தியாய் செருகினாள். அறைகள் பொலிவாகின.

"இதென்னா... எல்லா இடத்திலும் நிஜப் பூ?"

"நல்லாயிருக்கா அத்தை?"

"பளிச்சுன்னு இருக்கே."

"போலிகள் வசதிதான் - வாடாமல் இருக்கும்... ஆனா இந்த மிருதுவும் வாசனையும் அதுங்களுக்குக் கிடையாதே."

"காசு போட்டா அதுக்குண்டான கணை வரத்தான் செய்யுதுல்லா?"

"நிறைய பைன் இலைகளின் நடுவே ரெண்டு மூணு பூக்கொத்துகள் தாங்கறதால அதிக விலையில்ல அத்தை... நம்ப தெருவிலிருக்கிற பூக்கடைங்கறதால தள்ளுபடி கூட கிடைச்சது..."

"இனி வீட்டு அக்கௌண்ட்ல போட்டுரு விஜு... நாலைஞ்சு நாளைக்கு ஒரு தரமேனும் மாத்தணும்ல?"

"ஒரு வாரமேனும் தாங்கும்அத்தை. குவளையின் தண்ணீர்ல ஒரு சிட்டிகை உப்பும் சீனியும் கலந்திருக்கேன். ஆக லேசில் வாடாது."

"இதுக்குத்தான் வீட்டில் பெண் வேணுங்கறது - சமையலறையில தனி பிசுக்கில்ல. ஆனா படிக்க நேரம் மிஞ்சுதோ உனக்கு?"

"வந்தபிறகு ஒரு நாவல் கூட வாசிக்க முடிக்கட்டேன் அத்தை. சொகுசாய் அந்தக் கட்டில்ல சாஞ்சபடி வாசிக்கறது பரம சுகம்..."



"அப்ப எனக்கும் பரம திருப்தி - போ."

மலர்வனத்திற்கு விஜுலா அடிக்கடி போனாள் - காரணம் சதா மல்லிகாவின் கையில் விரிந்திருந்த அல்லது மேசையில் கவிழ்ந்திருந்த புத்தகங்கள்தான். இருவரும் சில புத்தகங்களைப் பரிமாறிக் கொண்டு சகஜமாய் சம்பாஷிக்க ஆரம்பித்திருந்தார்கள்.

ஆனால் மல்லிகாவின் மனசுக்குள் காதல் புகுந்திருந்ததாய் இவள் யூகிக்கவுமில்லை.

தன் மதிய உணவை டப்பாவில் அடைத்த நேரத்தில் அச்சாணியிடம் மறுபடி அதுபற்றி பேச்செடுத்தாள்.

"மல்லிகா முகம் கொஞ்சம் வாடித்தான் தெரியுது. அச்சாணி - அவ அம்மாக்கு உடல்நிலை சரியில்லைன்னால் கவலை சரி. ஆனால் காதலிருந்தா ஒரு பூரிப்பு... பளபளப்பு தெரியணுமே?"

"அந்தப் பொண்ணுக்கே ஏதும் நிச்சயமாத் தெரியாதே. பாண்டியத்துரை போக வரன்னு இருந்தாலும் வாய விட்டு என்னத்தைச் சொல்லுச்சு? காதலு கல்யாண டயலாக் எல்லா வுட்டதில்ல..."

"டயலாக் எதுக்கு பார்வை ஒண்ணே போதாது?"

"அது கூர்மையானவங்களுத்தான்... நம்ம துரையும் நீங்களும் ஊக்கு வுட்டுக்கறாப்பல..."

"ஊக்கு, இக்கு ஏதுமில்ல அச்சாணி... நேத்து அரை மணி நேரமாப் பேசினோம்... எது பத்தித் தெரியுமா?"

"ஐய... எனக்கெதுக்கும்மா அதெல்லா...? சின்னஞ்சிறுசுக நூறு விசயம் பேசுவீங்க..." அச்சாணி நெளிந்தாள்.

"நாத்துல ஒன்னைச் சொல்றேன். கேளேன்."

"சொல்லாத வுடமாட்டா..."

"மூலிகைப் பெட்ரோல் பத்தி ரெண்டு வருஷம் முன்னே ஒரே களேபரமாய் இருந்துச்சு - நினைவிருக்கா?"

"அட ஆமா, கெச்சாலா ஒத்தரு அந்த கண்டு புடிச்சதாப் சேதி வந்தது."

"அது பத்திதான் விவாதம்... அத்தனை விஞ்ஞானிகளுக்கு நடுவே அந்த மனுஷன் எப்படி மூலிகை பெட்ரோல் செய்து காட்ட சம்மதிச்சார்? அதை எப்படி தயாரிச்சு எரியவும் வச்சாருன்றதைப் பத்தி..."

"இதெல்லாம் எனக்கு எங்கம்மா புரியும்?"

"சாதாரண மந்திரம்தான் - அதை பத்தி எங்களுக்கு முன்பே ஒரு யூகம் இருந்தது. கடைசியில் எங்க யூகம் சரிதான்றது போல செய்தித்தாள் தகவலும் சொன்னது."

தன் சுருக்குப் பையிலிருந்து இரண்டு காய்ந்த வெற்றிலைகளைத் துளி சுண்ணாம்பு பாக்குடன் வாயில் சுருட்டிப் போட்டபடி அச்சாணி உன்னிப்பாய் கவனிக்கலானாள். மூளையைச் சற்று சுறுசுறுப்பாக்கும் முயற்சி அது!

"இலை தழை எல்லாம் போட்டு கொதிக்க விட்டாலும், அதை அவர் கொதி கலக்கியது ஒரு இரும்புக் கம்பியால்... அது கம்பியில்லை, இரும்புக் குழாய் - ஒரு முனையில் மெழுகால் அடைக்கப்பட்ட குழாய் - அந்த முனையைக் கொதி நீரில் முக்கியதும், அடைச்ச மெழுகு உருகிடுச்சு. குழாயினுள் அடைப்பட்டிருந்த பெட்ரோல் வெளியேறி நீரில் கலந்து, பெட்ரோல் தயாராகி விட்டதாய் ஒரு பிரமையை உண்டாக்கிடுச்சு..."

"அட இவ்வளோதானா? எனக்கே புரியுதேம்மா..."

"எளிய மந்திரம்தான்... ஆனால் எல்லோரும் யோசிச்சு யூகிக்கப் போறதில்லையே... ஆக திறமையாய் செய்றவங்க மத்தவங்களை ஏமாத்திடுறாங்க..."

"அதான அந்த கண்கட்டி வித்தைங்கறது?"



"புத்தியை பொழுது போக்காகவும் பயன்படுத்தலாம்... அதைவிட பிறர் நல்லதுக்கு பயன்படுத்தினா... நல்லது - நமக்கும் ஒரு திருப்தி... செய்யலாமா?"

கேட்டவளை வியந்து பார்த்தாள் அச்சாணி -

"அதெப்படிம்மா? சொல்லு..."

"இப்ப நீ சொன்னியே... அதுபோல மல்லிகா மனசையும் புரிஞ்சுக்கணும்... ரெண்டு பேருக்குமே உள்ளான காதல்தான்னா அவளைப் பாண்டியனோடு சேர்த்து விட்டுடறது... அந்தஸ்து, பெத்தவங்கன்னு மத்ததை ஓரங்கட்டிட்டு..."

"அய்ய... அதுக்கென்னாம்மா மந்திரம்... மேசிக்கு? அதுக்குத்தான் பாட்டே எழுதி வச்சுட்டானே?"

இப்போது வியந்து பார்ப்பது விஜுலாவின் முறையாயிற்று.

"என்ன பாட்டு?"

"கல்யாணந்தான் கட்டிகிட்டு ஓடிப் போலாமா - இல்ல ஓடிப் போயி கல்யாணந்தான் கட்டிக்கலாமா?"

இடுப்பை 'நச் நச்'சென ஆட்டியபடி அச்சாணி ஆட விஜுலா பலக்க தலையாட்டி மறுத்தாள்.

"சரியே வராது - அப்புறம் மிச்ச சொச்ச வாழ்வு எப்படிப் போகும் தெரியுமா?

'ஊரு ஜனம் பாத்துவிட்டு சிரிக்கட்டுமா இல்லை நினைச்சு நினைச்சு நீயே தினம் கலங்கணுமா?' ம்னு."

"அதுஞ் சரிதாம் - எங்க சேரியில அடிக்கடி இத்தே கோராமத்தான். கூட்டிட்டு ஓடினவன் ரெண்டே மாசம் சாலியா இருந்துட்டு தனியே ஓடிருவான் - நம்பி ஓடுனவ வயித்துல சுமையோட பெத்தவங்ககிட்டு திரும்பி வருவா..."

"பெண்கள் கவனமாய் இருக்கணும் அச்சாணி. சரியான ஆணைக் கணவனாய் தேர்ந்தெடுக்கறதிலும்... பிறகு

அவனைத் தன்னை விட்டுப் பிரிய முடியாதபடி கட்டிப் போடறதிலும்..."

"அந்தெல்லாம் பிறவும்மா... நம்ம கதையில பாண்டியன் தம்பிக்கு அந்த பூக்கார பொண்ணு மேல மூக்கு முட்ட ஆசை... கல்யாணம் கட்டுனா அவளத்தாங்கற அளவு லவ்வு. தங்கச்சி பவளத்துக்குப் பாத்தது போல பசையுள்ள இடமாப் பாத்துதான் இதுக்கும் முடிப்பாங்க... அத்த நினைச்சு நடுங்குது அந்தத் தம்பி... ஆனா எளிய பொண்ணுகிட்ட தம் மனசைச் சொல் லவும் பயம்..."

"அது சரிதான். மல்லிகா அவர் மனகள்ளே நிரம்பி மணக்கறான்னாலும் தான் அவ மனசில ஆசையைப் புகுத்தி பிறகு ஏமாற்றினால் பாவம்ங்கறதை உணர்ந்திருக்கார்... அதுக்கு ஆரம்பத்துலேயே காதலைக் குழி தோண்டி புதைச்சுடறது தேவலை..."

"குழந்தைய வளத்து சாவக் கொடுக்கத விட பிறந்ததுமே பறிக் கொடுக்கது கம்மி இம்சைங்கறாப்பல? ஆனா தம்பி பாவம் நல்ல கொணம்..."

"மல்லிகாவும் அமரிக்கையானவ - நீ என்ன நினைக்கறே அச்சாணி?"

ஏதோ யோசனையில் புருவம் சுருங்க கேட்டாள் விஜுலா.

"கேள்விப்பட்ட வரைக்கும் சீஜென்ட்டான பொண்ணாத்தாந் தோணுது. இப்ப ஆறு மாசமாத்தான் இந்த ஏரியாவுல கடை போட்டிருக்கு... இதுக்கு முன்ன ஸ்பென்ஸர்ல பெரிய பூக்கடையில வேல பாத்துச்சாம்... பிறவு இதும் சாமர்த்தியங் கண்டு இங்கத் தனியா கடை போட்டு இதும் பொறுப்புல விட்டிருக்காங்க..."

"ம்ம்... அப்ப பொறுப்புள்ள பொண்ணு... அவளை நம்பி அவளோட அவ அம்மா இருக்கறாங்க. வேற உறவுன்னு



யாருமில்லைப் போல... அவளுக்கு பாண்டியன் மேல நோக்கமிருக்கா இல்லையான்னு எப்படி தெரிஞ்சுக்கறது?"

"பணக்கார புள்ளையே வாயத் திறக்க அஞ்சு, இந்த எளிய பொண்ணு என்னத்தம்மா காட்டிக்கும்?"

"நீ ஒரு நோட்டம் பாரேன்..."

"இப்பத்தான் ஒரு வம்பிலேருந்து காப்பாத்துனன்னேன்... இப்ப செம வம்புல மாட்டி வுடப் பாக்குறியேம்மா... முன்ன பின்ன தெரியாத ஒரு பொம்புள வந்து உனக்கு யாரு மேல நோக்கம்னு கேட்டா அந்த மல்லிகாப் பொண்ணு சிலுத் துக்காது?"

"நான் சொல்றது போல போய் சொல்லு அச்சாணி. கண்ணை மட்டும் நல்லாத் திறந்து வச்சு கவனி... பார்த்ததை எங்கிட்ட வந்து சொல்லு..."

"சொன்னா?"

"பிறகு ஒரு மந்திரம் போடுவோம்... பாண்டியன் மனசுக் குள்ள இந்த மல்லிகா மணக்கறாப்பல ஒரு மந்திரம்!"

விஜுலா அதன் பிறகு சொன்னதை அச்சாணி கண்களை உருட்டி உருட்டி, உள்வாங்கிக் கொண்டாள்.



5

அன்று வந்திறங்கிய மலர்கொத்துக்களை பச்சைக் குழந்தைகளைப் போல பதனமாய் அள்ளியெடுத்து ரக வாரியாய் அடுக்கினாள் மல்லிகா.

ஆர்க்கிட் மலர்கள் லேசில் பூத்து விடுவதில்லை என்ப தாலும், விரைவில் வாடி விடுவதில்லை என்பதாலும் அவற் றுக்கு தனி மவுசு, விலை. கண்ணாடி குடுவைகளில் அவளாய் நீரூற்றி அவற்றை பார்வையாய் செருகினாள் - அவை பொதியப்பட்டு வந்த வேண்டாத இலை, தழைகளைப் பெருக்கி அள்ளினாள்.

குப்பையை வெளியே கொட்டும் போது அவளது கண்களை சாலையை அலசின... அவனைக் காணவில்லை.

ஆனால் கண்டிப்பாய் சற்று நேரத்திற்கெல்லாம் அவனது வெள்ளை மாட்டிஸ், சாலையை அளவெடுப்பது போல உருண்டு வரும்.

முதல் நாள் இங்கு மலர்கொத்து - வாங்க வந்தவன் தன்னையே பார்த்தபடி 'ப்ரமாதம்' என்று பாராட்டியது இப்போதும் நினைவில் வந்து குறுகுறுப்பூட்டியது.

இதுபோன்ற குளிரூட்டப்பட்ட பூக்கடைக்குள் வருப வர்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்திற்கு மேம்பட்ட வர்கள்தான். சாமானியர்களைப் போல ஒரு வீட்டிற்கு போகையில் ரெண்டு பாக்கெட் பிஸ்கட்டும் ஒரு சீப்புப் பழமும் போதும் என்றில்லாமல் பார்வைக்குக் கவர்ச்சியாய், எடுத்துப் போக அந்தஸ்தாய் இருந்தால் சரி என்று நினைக்கும் மேல் மட்டத்தவர்கள் - ஆக தினமும் அப்பேர்ப்பட்ட ஆண், பெண்களை அவள் பார்ப்பதுண்டு. காதலிக்காய் மலர்களை வாங்க வரும் இளைஞர்கள், மேல் அதிகாரிகளைப் பூக்களால் பாராட்ட திட்டமிடும் ஆண்கள் பலர். ஆகக் காக கச்சிதமாய் உருவாக்கிய ஆண்கள் அவளுக்குப் புதிதல்ல... ஆனால் அவனது அந்தப் பார்வை புதியது! அது இவளில் ஏற்படுத்திய பூகம்பமும் புதிதுதான்...

அன்றோடு நில்லாமல் தினம் பார்வையை இவளில் செருகி விட்டு அவனது கார் இக்கடையையே சுற்றி சுற்றி வந்தது.



வேலையில் எவ்வளவு முனைப்பாய் இருந்தாலும் மல்லி காவின் கவனமும் அவனது வருகைக்காய் கருத்தாய் காத் திருந்தது... அவனைப் பார்த்துவிட்டால் விரல்கள் தடுமாறும்.

மூச்சு வேறு தாறுமாறாகும்!

இதெல்லாம் அவளுக்குப் புது அனுபவந்தான். ஆனால் பாலும் கசந்ததடி, படுக்கையும் நொந்ததே என்று தோழியிடம் அதற்கான காரணம் கேட்கும் அளவு அறியாப் பெண்ணல்ல மல்லிகா! புரிந்தது... அதனாலேயே பயந்தாள்.

அந்த மெல்லிய ஹாரன் ஒலி கேட்டதும், வலுக்கட்டாய மாய் தன் கவனத்தை வேறு பக்கமாய் திருப்பி வைத்தாள். ஆனால் அவன் கடைக்குள் நுழைந்து விட, கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடாதே என்பது போல அவளது மொத்தமும் அவனிடமே சரணடைந்து நிற்கும்.

பூக்கள் எல்லாம் அந்த நொடியில் கூடுதலாய் மணப்பத் தாய் தோன்ற, அவனை வெகு நேரம் அங்கேயே நிறுத்தி வைக்க, என்னென்ன செய்யலாம் என்று புத்தி கெட்ட கணக்கு போகும்!

தன்னிடம் மிக லயித்துதான் பேசுகிறார்... ஆனால் பெரிய இடத்துப் பிள்ளை - அவருக்கு இது ஒரு பொழுது போக்காகக் கூட இருக்கலாம் - அல்லது ஒரு எளிய பெண் தனக்காக தவிப்பதைக் கண்டு ரசிக்கும் சின்ன குரூரமோ?

அவன் கேட்டதைத் தந்து, அவன் வெளியேறுவதைத் தாபத்துடன் பார்த்திருப்பாள்.

மலர்களை மட்டும் எடுத்துப் போகாமல், தன் மனதையும் ஏன் பிய்த்துப் போகிறான் என்ற தவிப்பு...

அகண்ட தோள்கள்... சரேலெனக் குறுகும் இடுப்பு... அவனருகே காரில் கிடக்கும் டென்னிஸ் மட்டையைக்

கண்டதும் அவனது உடற்கட்டிற்கான காரணம் புரிந்தது. ஆனால் அவனைப் பற்றி மேலும் விசாரித்தறியும் துணிவில்லை.

''ஹல்லோ பாண்டியன் - நேற்று கிளப்பில் தூள் கிளப்பிட்டியாமே? மூணு மாட்சுகளிலேயும் ஜெயிச்சு... வாழ்த்துக்கள் டென்னிஸ் சேம்ப்!'' என்று ஒருவர் கைக்குலுக்கிய போதுதான் அவனது பெயரே அவளுக்குத் தெரிய வந்தது.

பிறகொரு நாள், மலர்களை உரிய இடங்களுக்குக் கொண்டு சேர்க்கும் சேது வராததால், மூன்றாம் தெருவிலிருந்த ஒரு வீட்டிற்கான பூங்கொத்தோடு கிளம்பியவள், அடுத்த வீட்டில் அவனது காரினைப் பார்க்க நேர்ந்தது. அவனது தந்தை பிரபல வக்கீல் என்பதும் தெரிந்தது.

இவனது 'மாட்டிஸ்' தவிர அங்கு சின்னதும் பெரியதுமாய் மேலும் இரு நவீன வாகனங்கள் நின்றன. இனி அவனைப் பற்றி நினைக்கவும் கூடாது நீ என்றிவளை மிரட்டியபடி...

இவளும் மிரண்டுதான் போனாள்... ஆனால் பாழும் கண்கள் அவனுக்காய் அலைபாய்ந்தனவே!

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு 'ஜில்'லென்ற தன் கடைக்குள் நுழைந்த அந்தப் புதியவனை மல்லிகா ஒரு புன்னகையுடன் ஏறிட்டாள்.

இதுபோல கொசுவ சேலைக்கட்டும், செருகிய கொண்டையுமாய் வருபவர்கள் வெகு சொற்பம் - ஆனாலும் தங்கள் முதலாளிகளுக்காய், பூக்களை வாங்க, வேலைக்காரர்கள் வருவதுண்டுதான்...

''வாங்க... என்ன வேணும்?''

''அதென்னாது ரீத்து?''

''மலர் வளையம்... யாரும் இறந்து போயிட்டாங்களா?''



பரிவுடன் விசாரித்தாள்.

''ம்ம்க்கும் - அதுக்குத்தா... ஜல்தியாக்கட்டித் தாறுமே...''

''முப்பது நிமிஷமாகும்... பத்தரைக்கெல்லாம் கடைப் பையன் வந்ததும் தந்து விடறேன்... இந்த ஏரியாதானே நீங்க - விலாசம் தாங்க... அனுப்பி வைக்கிறேன்...''

''ஆவட்டும் - எம்புட்டாவும்?''

''உங்க பட்ஜெட்டைச் சொல்லுங்க... இருநூறு ரூபாயிலிருந்து ஆரம்பம்...''

''அது போதும்.''

''விலாசம் சொல்லுங்கம்மா...''

பேனாவைத் திறந்தபடி குனிந்தாள் மல்லிகா.

''இன்னா உலகம்மா? வாலிபப் புள்ள இப்படி போகக்குன்னு போவுமா? இதா இங்கேருக்கற மூணாவது தெருவில தான் அவுக வூடு? பாக்க வாட்ட சாட்டமான புள்ள, கிளப்புல டென்னிஸ் விளையாடினுக்குனு இருந்ததாம், தண்ணி தவிக்குதுன்னு ஒரு மடக்கு குடிக்கறதுக்குள்ளார, விழுந்து... ச்சே... வயித்தெரிச்சலும்மா...''

''யார்... யாரு?''

மல்லிகா திணறலாய் கேட்டாள்.

''பேரெல்லா நா எங்கக் கண்டேம்மா...?''

''தனி வீடா?''

''ஆமாமா... மூணு காரு நிக்குதுல்ல அந்தப் பெரிய வூடு வக்கீலு வூடுன்னுவாங்க...'' என்ற அச்சாணியின் எதிரே ஒரு பூங்கொடி போல சரிந்து விழுந்திருந்தாள் மல்லிகா!



6

பாண்டியனின் கார் அவனது வீட்டினுள் நுழையும் போது அவனது பார்வையில் படுவது போல நின்று கொண்டாள் அச்சாணி. அவளது காலைப் பற்றியபடி அவளது ஐந்துவயது மகன் மணி.

மணியைச் சந்தித்த அன்று விஜுலா கேட்டதுண்டு. "உம்பையன் பெயருக்கும் ஏதேனும் காரணம் இருக்கணுமே, அச்சாணி."

"அதென்னாம்மா? வண்டிக்கு அச்சாணி அவசியங்கற சாட்டியும் மணிச்சத்தந்தான் அழகு?"

மகனைப் பெருமிதமாய் பார்த்தபடி வந்தது பதில்.

காரிலிருந்து இறங்கிய பாண்டியன் சிறு வியப்புடன் விசாரித்தான்.

"அடடே... ஏதேது அதிசயமாய் தாயும் மகனுமாய் வந்திருக்கீங்க. எப்படி போகுது சார் படிப்பெல்லாம்?"

மணி வெட்கமாய் தாயின் முந்தானைக்குள் மறைய முயன்றான்.

"நல்லாப் பழக்கறாந் துரை - உங்க தயவுலதான் பள்ளிக் கூடத்துல இவனைச் சேத்துக்கிட்டாக?" என்ற அச்சாணியின் விழிகளில் நன்றியோடு சிறிது குற்ற உணர்வும் கலந்திருந்தது. இந்த இளைஞனைப் பற்றி சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டோமே என்ற குற்றக் குறுகுறுப்பு.



கடவுளிடம் மன்னிப்பு கோரி, மனசுக்குள்ளாகவே கன்னங்களில் படபடவென போட்டுக் கொண்டாள்.

'நல்லதுக்காவ பொய்யுஞ் சொல்லலாம்னு வள்ளுவ ரெல்லாம் எழுதி வச்சிருக்காவன்னு விஜுலாப் பொண்ணு ஏதேதோ பாட்டெல்லாஞ் சொல்லுச்சு...' என்று மனதை மேலும் சமாதானப்படுத்தினாள்.

"உள்ளே வா அச்சாணி... வீட்டுல எல்லாரும் துணியெடுக்க காஞ்சிபுரம் போயிருக்காங்க..."

"இருக்கட்டுந் துரை... உங்க காரைப் பாக்கவும் ரெண்டு வார்த்த பேசிட்டுப் போகலாம்னு நின்னேன்... நல்லாருக் கீங்கல்ல?"

அவன் முகத்தில் சொல்லொண்ணா வருத்தம் பரவியது. "ம்ப்ச்... மணி இங்க வா..." என்றவன் பாக்கெட்டைத் துழாவி, கைக்கு சிக்கிய நோட்டை சிறுவனிடம் நீட்டினான்.

"ஐய... அது ஆயிர ரூவா நோட்டுங்க..." பதட்டமாய் தடுத்தாள் அச்சாணி.

"இருக்கட்டுமே... இவன் படிப்புக்கு ஆகும்..."

"தயாள மனசு... நீங்க குழந்தை குட்டின்னு நல்லா வாழணும்..." அந்த வாழ்த்தில் அவன் முகம் மேலும் கசந்தது. நேற்று தன்னை பலி ஆடாய் பெண் பார்க்க இழுத்துப் போன நினைவில் எழுந்த கசப்பு.

"வாக்கு தந்துட்டோமேடா பாண்டியா... வந்து உட்காந் துட்டுப் போயிடு போதும்... பெரிய இடத்துல எங்க மானம் போயிடறது மாதிரி செஞ்சுடாத..."

"பாத்துட்டு எப்படிம்மா வேணாம்னு சொல்லுவீங்க?"

"சொல்லிறலாம் - அது அவங்களுக்குத்தான் கேவலம் - ஆக வாயத் திறக்காம அழுங்கிருவாங்கல்ல?"

நொந்து போனாலும் கூடவே போனான்!

கல்லூரிப் படிப்பை இன்னும் முடிக்காத அப்பெண்ணிற்கு சற்று அசட்டு முகம் - ஆனால் அது நிரம்பப் பெருமை! திருமணமாகி சில குழந்தைகளையும் பெற்று விட்டது போன்ற உடல் வாகு. அந்தக் கொழுப்பு அவளது வாயையும் விட்டு வைக்கவில்லை!

''எம் பையன் அவங்கப்பாவைப் போலவே பெரிய வக்கீலாய் வந்திருக்க வேண்டியது... ஆனா இப்ப பார்க்கற வேலையிலும் சம்பாத்தியத்திற்குக் குறைச்சலில்லை... இருந்தும் வீட்டுல பாண்டியன் வச்சதுதான் சட்டம்...'' என்று இவனது தாயை வாயை விட, ''எங்க வீட்ல அதேபோல விதண்டா வாதம், சட்டமெல்லாம் செல்லுபடி ஆகாது!''

'பட்டென' பதிலடித்தாள் புதுப்பெண்! எல்லோரும் சற்று அசௌகர்யமாய் சிரித்தார்கள். பழகி, நெருங்கிய பின் இப்படிப் பேசுவதில் தப்பில்லை எனலாம் - ஆனா பார்த்ததுமேயா?

அதுவும் பெண் பார்க்க என்று வந்தவர்களிடம் இப்படி வெளிப்... போகப்போக?

வெறுமையாய் வந்த அவனது நெஞ்சம் வெந்து கொண்டிருந்தது. ஆனால் அவனைப் பெற்றவர்களுக்கு இதெல்லாம் ஒரு லட்சியமாகவே இல்லை... லட்சங்களைப் பற்றியே பேசிப் பேசி மகிழ்ந்தார்கள்...

''நான் கல்யாணமே பண்ணிக்கறதாய் இல்லை அச்சாணி'' என்றான் முழு வெறுப்புடன்.

''அப்படிச் சொல்லக் கூடாதுல்ல துரை? உங்க குணத்துக்கேத்த மகராசி வருவா... அவகளோட நீங்க நிறைஞ்சு வாழறதும் - அத்த நாங்க பாக்கணுமில்லே?''



''ம்ப்ச்... தலை கனக்குது... உள்ள போயி உனக்குமாய் சேர்த்து காபி போட்டு கொண்டு வரியா?''

இவள் மறுக்காமல் சமையல் கட்டுக்குள் போனாள் - ஆனால் மனதுக்குள் போராட்டந்தான்.

ஆவி பறந்த கோப்பையை எடுத்து உறிஞ்சினான். வெந்த மனதை அச்சூடான பானம் சற்று ஆற்றியது போலும்... அச்சாணிக்கு வேண்டிய பிடியை இவனே எடுத்து அவளது கையில் வாகாய் திணித்தான்!

''இன்னைக்கு நம்ப பூக்கடை திறந்தில்லையே அச்சாணி?''

''நம்ப மல்லிகா பொண்ணு கடையத்தான் சொல்றே துரை?''

இவளும் 'நம்ப' என்பதில் அழுத்தினாள் -

''ம்ம்...''

''நீங்க அப்ப விஷயத்தக் கேள்விப் படல போல...''

''என்ன சொல்ற?'' அவனது கண்கள் இடுங்கின.

''அந்தப் பொண்ணைக் காணுமாந் துரை...''

கிடைத்த அதிர்ச்சியில் அவனது கைக் காபி தளும்பிச் சிந்தியது...



7

''என்ன... என்ன சொல்றே? சரியாச் சொல்லு...''

''எனக்கும் விலாவாரியா எல்லாந் தெரியாதுல்ல துரை - ஆனா 'நம்ப' மல்லிகாப் பொண்ணு பின்னாடியே ரெண்டு

மூணு பசங்க சுத்துவாங்களாம்... ஏழைப் பொண்ணு, அழகுப் பொண்ணு - அவனுங்களுக்கு இருப்புக் கொள்ளாதே... ஆனா இது அவனுகளை ஏறிட்டும் பாக்கறதில்லியாம்... ஆனாலும் அவனுவ விடாத தொரத்தி தொந்தரவு பண்ணியிருக்காறுக."

கேட்டவனின் கண்கள் சிவந்தன.

"யார் யாராம்?"

"காவாலி பசங்க துரை... அவனுக பேரு, ஊரெல்லாம் நாம் போய் விசாரிச்சா... எம் புருஷன் என்னைய நிமுத்திப் புடுமில்லே?"

"பாவம், அவ, அம்மாவோட தனிச்சிருக்கற பொண்ணு..."

"அப்படித்தா நானும் கேள்விப்பட்டேந் துரை... இப்ப நா வேலை செய்ற வூட்டுப் பொண்ணு விஜு~லாவுக்கு 'நம்ப' மல்லிகாவப் பழக்கம்... அந்த வூட்டு விக்ரமனு தம்பியக் கூட உங்களுக்குத் தெரிஞ்சிக்கணும்..."

"ம்ம்... இளப் லைப்ரரிக்கு வருவார்..." பதட்டமாய் சொன்னவன் தொடர்ந்தான். "இப்ப வர்ர வழியலதான் பார்த்தேன். கடை பூட்டியிருந்தது. எப்போதிருந்து மல்லிகாவைக் காணலை? ஒருவேளை உடம்பு சரியில்லாம வீட்டுல கூட இருக்கலாம் அவ..."

அச்சாணி விழித்தாள்.

"நா என்னத்தக் கண்டேந் துரை... ஊர்ல பேசிகிட்டதச் சொன்னேன்..."

"ஊர்ல எல்லாருக்குந் தெரியும்ணா, பொலிஸ்ல புகார் தர வேண்டியதுதானா? நல்ல நேரம் பார்த்துட்டிருக்காங்களா?"

சிடுசிடுத்தான்... அவனது நெற்றி வியர்த்து விட்டிருந்தது. "அதென்ன - அப்டி கனவாச் சொல்லிட்டீக? வயசுப்



பொண்ணைக் காணோம்ன்றத ஊருக்கு தண்டோரா அடிச்சாச் சொல்றது?"

"அவ... ஒருவேளை யாரோடாவது... அவ மனசுல காதல், கத்தரிக்காய் ஏதும் முளைச்சிருந்ததோ அச்சாணி?"

அவனது தாடை அந்தப் பயம் தாங்காமல் அழுந்த இறுகியது.

"ச்சே... அதெல்லாம் இருக்காது துரை... தன்னைச் சுத்தின எந்தப் பயலையுமே அந்தப் பொண்ணு திரும்பிப் பாக்காதாமே?

என்ன பாக்குறீங்க.. ஹி...ஹி... அதுவும் ஊரு பேச்சுதான்... 'நம்ப' பொண்ணு யாருகிட்டயும் அநாவசியமா ஒரு வார்த்த விடாதாம்... அளந்துதான் சிரிக்குமாம்."

"இப்படி ரொம்ப அழுத்தமாய் இருக்கறவங்க மனசுல என்ன ஓடுதுன்றதைக் கண்டு பிடிக்கறது சிரமம்..." - அலுத்தான்.

"எளியவங்க, அதிலும் ஆண்துணை இல்லாத ஏழைப் பொண்ணு எதையும் விவரமாக காமிச்சுக்க முடியாதுல்ல துரை? தன்னை தொரத்தறவனை மிரட்டவும் முடியாது. தனக்குப் பிடிச்சவனப் பாத்து சிரிக்கறவும் முடியாது."

அச்சாணி எடுத்துச்சொல்ல, நெரிந்த அவனது நெற்றி சற்று சமனப்பட்டது.

"பணக்காரனின் நிலையும் அப்படி ஒன்றும் லேசில்லை அச்சாணி. எதிலும் அந்தஸ்து ரொம்ப முக்கியம்... அதற்கு சரிவராத யாரையும் பார்த்து பிரியப்பட்டிடக் கூடாது... பேச, ஏன் பார்க்கக் கூட கூடாது. ஆனா இப்ப ஒன்று

புரிஞ்சுகிட்டேன்... ஒரு படி மேலே ஏறணும்னால் கீழேயுள்ள படியை விட்டுத்தான் ஆகணும்..."

"எந்தப் படிய விடணுந் துரை?"

"அந்தஸ்துன்ற படி இனி அவசியமில்லைன்னு நினைக்கறேன்."

அச்சாணி பலக்க தலையாட்டினாள்.

"மல்லிகாவின் வீடு எங்கேருக்குது அச்சாணி - கொஞ்சம் விசாரிக்க சொல்றியா?"

"இப்பதானே யாரோ சொன்னாக? கோபாலபுரம் மைதானத்தை ஒட்டி இருக்குதாம்... அத ஒட்டி சோத்துக் கையாண்ட திரும்பினா அஞ்சாவது வீடாம்... வீட்டு கொல்லப்புற போர்ஷனாம்..."

விலாவாரியாய் விளக்கி விட்டு.

"அதெதுக்கு தம்பி உங்களுக்கு? இந்த சந்தர்ப்பத்துல அங்கன போனா வேணாத வம்பாயிரப் போவுது" என்றும் சொன்னாள்!

"நீ கௌம்பு அச்சாணி... எனக்கு வேலை இருக்குது."

அவள் திரியைப் பற்ற வைத்து விட்டாள். பற்றிய திரி கருகிக் கொண்டே போகும் இறுதியில் அவனது மனதில் புதுத் தெளிவு... முடிவைச் சந்திக்க தயாராகி விட்ட துணிவு!

மல்லிகாவின் வீட்டைக் கண்டுபிடித்துப் போவதுதான் அவனது வேலையாக இருந்தது!

கதவைச் சற்றே திறந்து பார்த்த அந்த நடுத்தர வயதுப் பெண்ணின் முகத்தில் அருளில்லை.

பொட்டும் பூவுமில்லாததால் அப்படித் தெரிந்ததோ அல்லது ஒரே மகளைக் காணாத கலக்கம்தான் அந்த முகத்தை



அப்படி வெளிற வைத்திருந்ததோ... அவனுக்கு நிச்சயமாய் தெரியவில்லை.

கைகுவித்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"அம்மா, எம்பேர் பாண்டியன் - ஒரு பெரிய கம்ப்யூட்டர் நிறுவனத்தில் விளம்பரத் துறையில் மேலாளராய் இருக்கேன்."

கதவு திறப்பதாயில்லை.. அந்த அம்மாளின் முகத்திலும் இளக்கமில்லை.

"மூணாவது தெரு வக்கீல்ன்னு கேள்விப்பட்டிருப்பீங்க... அவருடைய மகள்."

இப்போது கதவு சற்று விரிந்தது.

"மல்லிகா... உங்க மகள்தானே..."

சற்று பயத்துடன் தலை ஆட்டினாள் அம்மாது.

"அவங்க கடைக்கு பக்கத்துலதான் எங்க வீடு."

"ம்ம்..."

"அவங்க கடைக்கு வரலை போல... கடை மூடியிருக்குது... அதான்..."

"சாயங்காலம் வேறு ஆளை வச்சு கடையத் திறப்பாங்க..." வறட்சியாய் பதில் வந்தது.

"இல்லைம்மா... நா கடையில் பூ வாங்கறதுக்காய் மெனக்கெட்டு இவ்வளவு தூரம் வரலை... மல்லிகாக்கு என்ன ஆச்சு... உடம்பு சுகமில்லைன்னு உள்ளே படுத்திருக்காங்களா... இல்ல ஆஸ்பத்திரி போயிருக்காங்களா?"

அதுவரை அடக்கி வைத்திருந்த அத்தாயின் வேதனையும் பயமும், இவனது கரிசனையான பதட்ட விசாரணையில், கண்ணீராய் கலந்து கொட்டியது.

"அவ இல்ல..."

"அதான் எங்கேன்றேன். ப்ளீஸ் என்னைய நம்பி நீங்க பேசலாம்மா..."

"உள்ளே வாங்க..."

அவன் நுழைந்ததும், கதவைச் சாத்தினாள். வெளிச்சமும் காற்றும் அற்ற அந்த சின்ன அறையில் அவனுக்கு மூச்சு முட்டியது. அவனது மல்லிகை இங்கா குடியிருந்து வாடுகிறது?

அவனது கண்கள் இருட்டிற்குப் பழகிய பின்பு அந்த சின்ன அறையைச் சுற்றி வந்தன...இது அவனது மல்லிகாவின் வீடு என்ற பரிவுடன் ஒவ்வொரு பொருளாய் தடவியபடி...

"சொல்லுங்கம்மா... என்னாச்சு?"

"இது... இது வெளியே, ஊருலகத்திற்கு தெரியவே கூடாது தம்பி..."

"எல்லாருக்கும் தெரிஞ்சு, அப்படிக் கேள்விப்பட்டுத்தான் நான் இங்கே வந்திருக்கேம்மா... உரியவங்களுக்கு, அதாவது உதவக்கூடிய போலிசுக்குத் தெரியப்படுத்தணும் நாம... இல்லைன்னா ஆபத்தாய் முடியும்..."

செறப்பட்ட அச்சம் மேலும் கண்ணீராய் வெளிப்பட்டது.

"அழாதீங்கம்மா... மல்லிகாவை எப்போதிருந்து காணும்?"

"இன்னைக்குக் காலைல எப்பவும் போல வேலைக்குப் போனாளே..."

பாண்டியனின் முகம் சற்றே சாந்தப்பட்டது.

இந்த ஆபத்து நேர்ந்து சில மணி நேரங்களே ஆனது என்ற ஆஸ்வாஸம்.



"அப்பாக்கு காவல் துறையில பெரிய அதிகாரிகளைத் தெரியும்... ஆக காதும் காதும் வைத்தது போல..."

"மல்லிகாவிற்கு தெரிஞ்ச பொண்ணு - பேர் விஜி... இல்லையே... விஜுலான்னு சொன்னா... இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன்னே இங்கே வீடு தேடி வந்திருந்தா..."

"ஓஹோ?"

அந்த அறையிலிருந்த ஒரே நாற்காலியில் மல்லிகாவின் தாயை அமரச் செய்தவன், கவிழ்த்த மரப்பெட்டியில் அமர்ந்தான்.

அன்றுதான் விஜுலாவின் பெயரை அச்சாணியும் குறிப்பிட்டிருந்தாள் என்பதும் அவன் கவனத்திற்கு வந்தது.

"இந்தப் பொண்ணுக்குத்தான் மல்லிகா போன் செய்தாளாம். அதாவது யாரோ தன்னைக் கடத்திப் போய் அடைச்சு வச்சிருக்காங்க என்பதை விஜுலாக்குத்தான் தெரியப்படுத்தியிருக்கா..."

"ச்சே... அதென்ன யாரோ? யார், எவர்னு சொல்லியிருந்தால் நேரே போய் மல்லிகாவை மீட்டிடலாம்ல? யாரோன்னு என்ன புலம்பல் வேண்டியிருக்குது?" பாண்டியன் படபடத்தான்.

"காலைல மல்லி கடைக்குப் போனதுமே, உடனடியாய் ஒரு மலர்ச்செண்டு வேணும்னு கேட்டு போன் வந்ததாம்... கொண்டு போய் தரும் சேது வர நேரமாகுங்கறதால், மல்லியே அதை எடுத்திட்டுப் போயிருக்கறா..."

"அப்ப அந்த வீட்டு விலாசம் சொல்லியிருக்கணுமே?" அவசரமாய் குறுக்கிட்டான்.

"அது... அதெல்லாம் தெரியலியே தம்பி. போன இடத்துல எப்படியோ அகப்பட்டுகிட்டா... தன்னை ஒரு வீட்டில் அடைச்சு வச்சிருக்கறதாய் தகவல் தந்தாளாம்."

''அப்ப எப்படி போன் செய்தானாம்? தகவல் தர அத்தனை வசதியும் செய்தா ஒருத்தியைக் கட்டிப் போடுவாங்க? கடத்துவாங்க? ஏதோ நெருடுதே?''

''மல்லிகா முழுக்க ஏதும் சொல்லமுடியலை... யாரோ இடையே புகுந்து தடுத்துட்டாங்கன்னும் அந்த விஜூலா சொன்னாளே தம்பி...''

''ஓஹோ?''

''அந்த விஜூலாப் பொண்ணு ரொம்ப தைரியமும் சொன்னாப்பா. வேற யாரேனும் வந்து 'உங்க மகளைக் காணலைன்னா' நான் செத்தே விழுந்திருப்பேன்.''

எழுந்தவன் நடுங்கிய அத்தாயின் தோள்களில் ஆறுதலாய் தட்டினான்.

''வேறேதும் தகவல்...?''

''அந்த அதிர்ச்சியில் ஏதும் என் மண்டையிலே பதியலையே.... விஜூலா, கடைசியாச் சொன்னது மட்டுந்தான் ஒரே ஆதரவு... அதைத்தான் பிடிச்சுட்டு உயிரோட இருக்கேன்...''

''என்ன சொன்னாங்க?''

''நானும் எங்கத்தானுமாய் எப்படியேனும் உங்க மகளைக் கண்டுபிடிச்சு இன்னைக்கு சாயந்தரமே கூட்டிட்டு வந்துடறோம்னுச்சு... அவளுக்குப் பிடிச்ச டிபனாய் செய்து வைக்கணுமாம்... என்ன சொன்னாலும் பெத்த மனசு அஞ்சுதேப்பா... வயசுப் பொண்ணை இப்படித் துணிஞ்சு கடத்தினவன் அவளைச் சும்மாவா விடுவான்? பூப்போல பொண்ணாச்சே எம்மல்லி... வீட்டுல கூட வாய் விட்டு சிரிக்கமாட்டா... 'வீட்டுல அப்படி சிரிச்சு பழகினால், வெளியே அடக்க முடியாதேம்மா... அப்பா இல்லாத பொண்ணு நான் கவனமாய்



இருந்துக்கணுமே'ன்னுவா என் ராஜாத்தி. அவளை நாசம் செய்தா தாங்க மாட்டாப்பா. பிறகு ரெண்டு பேரும் சேர்ந்து மருந்து குடிச்சு சாகறதைத் தவிர வேறு நாதியில்லை...''

''அப்படி ஒரு நிலைமை வரவேப் போறதில்லைம்மா... ஆக மல்லிகா போனது ஒரு தெரிஞ்ச விலாசத்திற்கு. ஏற்கெனவே அறிமுகமான வீட்டிற்கு... அதே ஏரியாவாகவும் இருக்கும். இல்லைன்னா கடையை மூடிட்டு அப்படி போக மாட்டா...''

தனக்குள்ளாகவே பேசியவனின் சிந்தனை சீர்பட்டது. தன்னையும் அறியாமல் அவனது கைகள், நடுங்கிய அத்தாயின் கைகளைத் தன்னதில் பொதிந்து ஆறுதல் படுத்தின.

''இப்படி முன்பின் அறியாதவங்களின் நல்ல சொல்லுதான் தம்பி... ஒரே ஆறுதல்... ஆனா மல்லிகா வந்த பிறகு... அவ சொல்றதைக் கொண்டுதான் நாங்க வாழுறதா... செத்துடற தான்னு...''

''ஷ்... அந்தப் பேச்சு மட்டும் வேணாம்மா... மல்லிகா எப்படி, எந்த நிலைமையில் வந்தாலும் சரி. அவளுக்கு நான் இருக்கேன்.''

உறுதி மொழி தந்தது போல இறுகின அவனது கைகள். விங்கிச் சிவந்த அத்தாயின் கண்கள் குழப்பத்துடன் அவனை ஏறிட்டன.

''மல்லிகாவை நான் கல்யாணம் செய்துக்கறேன்... நீங்க அவசரப்பட்டு எந்த தப்பான முடிவிற்கும் போயிடக் கூடாது. சரிதானா?''

இனியது என்றாலும் இந்த மறு அதிர்ச்சியை அவரால் தாள முடியவில்லைதான்... சற்று நேரம் இருட்டிய கண்களை மூடியபடி இருந்தவர் முணங்கினார்...

''நீங்க... சொல்றது... மல்லிகா ஏதும் சொல்லலியே... கல்லைத் தூக்கி எம்மேலப் போட சமயம் பாத்திருந்தாளா?''

"இல்லைம்மா... மல்லிகாக்கு இதுவரை ஏதும் தெரியாது... அதாவது நான் அவளை நேசிக்கறதாய் அவளிடம் சொல் லலை... ஏன் நானே இப்பதான் துணிஞ்சு முடிவெடுத் திருக்கேன்..."

என்றவன் கதவு மூடிய ஜன்னலற்ற அச்சிறு அறையில் வியர்வையால் நனைந்த தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.



8

தன் முன் நின்ற அந்த இளைஞன் தனது மாப்பிள்ளை ஆகக் கூடும் என்று உணர்ந்த உடனே மல்லிகாவின் தாய் எழுந்து விட்டார்!

"இப்படி வியர்த்துடுச்சே தம்பி - இந்தாங்க விசிறி... பானைத் தண்ணீர் தரேன் இருங்க..." அத்தனை நேரம் ஓய்ந்து கிடந்த உடம்பில் புது பெலன் ஊறிக் கொண்டிருந்தது!

அந்த பெலன் இவனையும் உற்சாகப்படுத்தியது.

"என் வீட்டுல எதிர்ப்பு வருமோன்னு தயங்கிதான், இதுவரை அவளிடம் ஏதும் சொல்லலைம்மா... ஆனா மல்லிகாக்கு ஆபத்துன்னு கேட்டதே என்னை உலுக்கிடுச்சு... அவ இல்லாம என்னால் வாழ முடியாதுங்கற உறுதி புரிஞ்சுது..."

ஜில் லென்ற தண்ணீர் பருகிய தெம்பில் அடுக்கினான்.

"எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை தம்பி... வக்கீல் வீடு ரொம்பப் பெரிய இடம்னு தெரியும்... அதனால..."



"தைரியமாய் மட்டும் இருங்க. அந்த விஜுலாவைப் போய் பார்த்தா சிக்கல் சரியாயிடும்னு தோணுது... அவ விக்ரமனின் உறவுப் பெண்தானே... அவர் வீட்டில் தங்கியிருப்பதாய்தான் அச்சாணி சொன்னா?"

"அதெல்லாம் தெரியலையேப்பா... மல்லிகா அந்தப் பொண்ணைப் பற்றி ஒன்னிரண்டு முறைப் பேசியிருக்கா - அவ்வளவுதான். அதுவும் கடைக்கு வந்து இந்த கதை புத்தகம் தந்தாம்மான்னு சொன்னதாய் ஞாபகம். இன்னைக்குத்தான் நான் அந்தப் பொண்ணு, விஜுலாவைப் பார்த்தது. உங்களை மாதிரியே தெளிவான, தைரியமான பொண்ணாய் தெரிஞ்சு துங்க..."

தன் தெளிவு, துன்பம் குறித்து வந்த பாராட்டைப் பாண்டி யனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இத்தனை நாட்களாய் நத்தையாய் தன்னுள் ஒடுங்கிப் பொறுமியது அவனுக்குத் தானே தெரியும்.

"அவங்கப்பா முன்னமே சொல்வார்... மல்லி பொண் ணுக்கு ராஜாவாட்டம் மாப்பிள்ளை வீடு தேடி வருவார்னு... வந்த நேரம் இப்படி ஒரு சோதனை ஏன்னுதான் புரியலை..."

"சோதனை, வேதனை எல்லாம் ஒன்னுமில்லை... மல்லிகா எப்ப வந்தாலும் சரி... நான்தான் இந்த வீட்டு மாப்பிள்..."

கதவு பலக்கத் தட்டப்பட்டது.

யாரோ பொறுமை அற்று தட்டினார்கள்.

பாய்ந்து திறந்தவனின் முகம் வெளிறியது.

வெளியே நின்றிருந்தவர்களைப் பார்த்தவனின் முகம் சில நொடிகளில் பல பாவங்களைக் காட்டினாலும் வார்த்தை மட்டும் வரவில்லை!

"உள்ளே போய் பேசுவோமே...?"

வழி விட்டு நின்றான்.

அதுவரை உணர்ச்சிகரமாய் துள்ளிய அவனது நாக்கு இப்போது மரக்கட்டை போலக் கிடந்தது!

முதலில் உள்ளே நுழைந்தவனைக் கண்ட மல்லிகாவின் தாய் கத்தினார்.

"ஐயோ... எம்மல்லி... வந்திட்டியா..." பாய்ந்த தன் தாயை ஆதரவாய் இறுக்கிக் கொண்டாள் மகள்.

"வேணாம்மா... அழவேணாம்... எனக்கு ஒன்னுமில்லை..." அந்நேரத்திலும் உயராத அக்குரலை வியந்து கவனித்திருந்தான் பாண்டியன்.

"இவங்க விஜூலா - அவுங்க விக்ரமன் - ரெண்டு பேருந் தான்..."

"கோடி நன்றிம்மா... உங்க மகளைக் கூட்டி வந்து சேர்க்க நானாச்சுன்னு சொல்லி, அதேபோல செய்துட்டியே புண்ணியவதி... இல்லைன்னா எந்நெஞ்சு தாங்கி இருக்காது..."

"மன்னிச்சிருங்கம்மா... நல்லவேளை நான் போட்ட திட்டம் அப்படியேதும் விளையாய் முடியலை... நீங்க விளையாய் நினைச்ச பயந்த இத்தனையும் ஒரு விளையாட்டு தாம்மா... நாடகம்னு வைங்களேன்..."

தயக்கமாய் பேசினாள் விஜூலா.

"என்ன முட்டாள்தனம் இது... விளையாட்டா? ஒரு தாயை இப்படிப் புழுவாய் துடிக்க விட்டது நாடகம்னா..."

பொங்கிய பாண்டியனை ஒரே பார்வையில் படிய வைத்தாள் விஜூலா.

"தாய் துடிச்சது சரி... நீங்களும் தவிச்சிட்டீங்க போல பாண்டியன்?"



கேட்டவளை விறைப்பாக நோக்க முயற்சித்தாலும் அவனது முகத்தில் வெட்க ரேகைகள்!

"மல்லிகா காணும்னு தெரிஞ்ச இந்த ஒரு மணிநேரத்தில் கல்யாணம் வரைப் போயிட்டீங்களோ?"

இவர்கள் இத்தனை நேரம் வெளியே நின்று தன் காதல் முழக்கங்களை எல்லாம் ஒட்டுக்கேட்டிருக்கிறார்கள் என்பது புரிந்தவனின் முகத்தில் மேலும் வெட்கம்!

ஆனாலும் கண்கள் தன் தாயின் அணைப்பில் நின்ற மல்லிகாவை ஆவலாய் தொட்டு, பின் தாழ்ந்தன.

"என்னம்மா விஜூலா? இது... இதெல்லாம் அதாவது மல்லியைக் கடத்திட்டாங்க, காணலைன்றதெல்லாம்... உங்க நாடகமா? இப்படியுமா விளையாடுவாங்க..."

ஐந்து பேரே உரசினாற் போல நின்ற அச்சிறு அறையில் ஆறாவதாக அச்சாணியும் புகுந்து கொண்டான்.

"மன்னிச்சிருங்கம்மா... முதல்ல மல்லிகாப் பொண்ணு மனச அறிய என்னையத்தான் அனுப்புச்சு விஜூ. பாண்டியந் துரைக்கு வந்து... அதாவது ஆபத்துன்னு கேட்டதுதான் தாமசம், அப்படியே மயங்கி வுழுந்திருச்சு உங்க பொண்ணு... நாங்க இந்த ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டு ஓடினோம்... அந்நேரம் இந்த மல்லிப் பொண்ணுக்கு ஜுரக்கு வூட்டுத் தோத்த ரெண்டு மூணு காவாலிப் பயலுவ 'ஏங் கடை மூடியிருக்கா? அந்த உத்தம பத்தினி காணாமப் போயிட்டாடோய்'ங்க."

"அந்த விஷமப் பேச்சு விஷமாட்டும் பரவிடுச்சு... மல்லிகாவைப் பரிசோதிச்ச மருத்துவர் - 'அதிர்ச்சி தாங்கலை. ஒரு நாளாவும் ஓய்வெடுக்கட்டும்னு சொல்ல' இவளை நேரே எங்கத்தை வீட்டுக்கு அழைச்சு போய் விட்ட போதுதான் எனக்குள் அந்த யோசனை..."

தாங்கில விஜுலாவின் பேச்சை குறுக்கிட்டு வெட்டினான் பாண்டியன்.

''அதாவது மல்லிகா கடத்தப்பட்டதாய் சொல்றது...''

''வேற யாருகிட்டேயும் இல்ல துரை... உங்களாண்டயும், இந்த அம்மாட்டேயுந்தான்...''

பாண்டியனின் விழிகள் வெளிரி, வியர்த்த மல்லிகாவின் முகத்தைக் கரிசனையுடன் கவனித்தன...

''எங்க வீட்டிற்குப் போய் மிச்ச சொச்சத்தைப் பேச லோமே...?''

மல்லிகாவின் விழிகள் மிரண்டன.

''தற்சமயம் அங்கே யாருமில்லை... தவிர... இனி பதுங்கி, மறைந்திருப்பது அவசியமில்லைன்னு நினைக்கறேன்... மல்லிகாவிற்கும் என்னைப்பிடிச்சிருந்தால் சீக்கிரமே கல்யாணத்திற்கு நான் தயார். தனியே ஒரு ஃபிளாட் பார்த்துடறேன்... அதாவது அம்மா, அப்பா மனம் மாறும் வரை...''

''அக்காங்... புடிக்காமத்தான் உனக்கு ஆபத்துன்னவும் அப்படியே சரிஞ்சு வுழுந்துதாக்கும்?''

''அப்படி சொல்லியிருந்தாக்கூட தாங்கியிருப்பேன்... ஆனால் மலர்வளையம் தயாரிக்கச் சொன்னதும்...'' முகத்தை மூடியவளின் உடம்பெல்லாம் நடுங்க, அவளருகே போய் அணைத்தாற்போல நின்றான் பாண்டியன்...

''பாண்டியன் நீங்க வேணா உங்க வீட்டுக்குப் போங்க... நாங்க கிளம்பறோம்... இப்பதான் மந்திரம் வேலை பாத்திருச்சே... இனி இந்த மந்திரவாதிகளின் தேவை இல்லியே...'' விக்ரமன் புன்னகையுடன் விஜுலா, அச்சாணியின் பக்கம் கை காட்டியபடி கிளம்பினான்.



''ஒரு நிமிஷம்..''

''என்ன பாண்டியன்?''

''எங்க அப்பா, அம்மா மனசை மாத்தவும் இதுபோல ஏதும் மந்திரம் மாயம் இருக்கும்னால்...''

''இருக்கே... கல்யாணமான பத்தாம் மாசம் ''குவா குவா''ன்னு கேக்கற அந்த மந்திரம் பிரமாதமாய் வேலை செய்யும்!''

அச்சாணியை அவள் வீட்டுப்பக்கமாய் இறக்கி விட்டு, வீடு சேர்ந்தனர் விஜுலாவும் விக்ரமனும்.

''இஞ்சி டீ போடறியா விஜுலா?''

ஒரு பார்வையுடன் உள்ளே போனாள் - ஐந்தாம் நிமிடம் வந்த தேநீரைப் பருகியவன் கேட்டான்.

''அதென்ன ஒரு மிடுக்கான முறைப்புடன் போனே?''

''மந்திரம் போட்டு மெனக்கெட்டது நாங்க... எல்லாம் நல்லபடி முடிஞ்சதும் உங்களுக்கு டீ வேற போட வேண்டியிருக்கேன்னுதான்...''

''எல்லாம் நல்லபடி முடிஞ்சதில்லை?''

மீசையைத் தடவியபடி சொன்னான்.

''நீங்க பார்த்தது வெறும் டிரைவர் வேலைதான்... அதுக்கு ஏன் இத்தனை ஜம்பமாய் மீசையைத் தடவணும்?''

''உனக்கு ரொம்பக் கோபம் போல...''

''ல்ல.... மீசையத் தடவினீங்களா, இப்ப வாசிச்ச கந்தர்வனின் கவிதை வரி ஞாபகம் வந்துத் தொலையுது...''

சிடுசிடுத்தான்.

"சொல்லேன்."

"விதவிதமாக மீசை வைத்தோம் - ஆனால்

வீரத்தை எங்கோ

தொலைத்து விட்டோம்."

"ஆகா - இப்பப் புரியுது விஜுலா உங் கோபம்! காதலை வெளியேக் காட்டாத பேடிதானே நீயும்னு என்னைக் குத்திக் காட்டறே. அதை நேரே சொல்ல முடியாமல் சுற்றி வளைக்கறதில் சின்ன சிடுசிடுப்பு... அதானே?"

அவனது முறுவலும், சீண்டும் பார்வையும் தன் நேசத்தை அவளிடம் வெளிப்படுத்த ஆரம்பித்திருந்தன... விஜுலாவின் முகத்தில் வெட்கச் சுடரின் வெளிச்சம்...!